66

உ
சிவமயம்.



திருமங்கலம் பத்திரகாளியம்மன்
நவராத்திரி உற்சவக் கும்மி.

OFFICE OF THE REGISTRAR
4-OCT
MADRAS

இது
திருமங்கலம் மகா-ா-ா-ஸ்ரீ
சு. ம. சிவசுப்பிரமணிய நாடாரவர்கள்
விருப்பத்தின்படி

கோப்பநாயக்கன்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ
ப. ஆறுமுகநாடாரவர்களால் இயற்றப்பெற்று

திருமங்கலம் தமிழ்ப்பண்டிதர்
ரா. சடகோப ரெட்டியாரவர்களால்
பார்வையிடப்பெற்று

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1927—பிரபவஸு.

Copy Right.

025:414
N27
177039

உ

ஓம் சரவணபவாய நம:

244
894.811

திருமங்கலம், பத்திரகாளியம்மன் நவராத்திரி உற்சவக்

கும்மி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
4 - OCT 192
MADRAS

இது

திருமங்கலம் மகா-ா-ா-ஸ்ரீ சு. மகாலிங்கநாடாரவர்கள் குமார

சு. ம. சிவசுப்பிரமணிய நாடாரவர்கள்

விருப்பத்தின்படி

கோப்பநாயக்கன்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ பழனிவேல் நாடாரவர்கள் குமாரரும், வதுவார்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ கா. நாகலிங்க நாடாரவர்கள் மாணுக்கரிலொருவருமான மகா-ா-ா-ஸ்ரீ

ப ஆறுமுக நாடாரவர்களால்

இயற்றப்பெற்று

திருமங்கலம் பாண்டியகுல க்ஷத்திரிய நாடார் செக்கண்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ரா. சடகோப ரெட்டியாரவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1927—பிரபவஸு.

Copy Right.

உ

சிவமயம்.

பத்திரகாளி அம்மன்.

உ

சு. ம. சிவசுப்பிரமணிய நாடார்,

ஜவுளி வியாபாரம்,

பத்திரகாளி மாரியம்மன் தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்,

திருமங்கலம்.

உ

முகவுரை.

செந்தமிழ் நிறைந்த நன்ஞடுகளாய மூன்நாடுகளில் ஒன்றுனதும், மாநில மடந்தைக்கு மலர்க்கண் போன்றதும், ஈண்டினர்க்கு வேண்டிய வழங்கும் பாண்டிய மன்னர்க்குத் தலை நகருமான மதுரையம் பதிக்குத் தக்ஷிணகுடபாலுள்ளதும், பூவகத்துள்ளார் நாவகத் தேத்தும் பாவகர நதியாற் சூழப்பெற்றதுமான திருமங்கலமாநகரின்கண், எத்திசையோருஞ் சித்தமதுகந்து பத்திகொண்டு துதிக்கப்பெற்ற ஜகத் காரணியாயும், சான்றூர்குல மக்கட்குக் குலதெய்வமாகியும் கோவில்கொண் டெழுந்தருளியிருக்கும் பத்திரகாளியென்னும் பரமேசுவரி பக்தர்களுக்கு வேண்டியாங்கு வேண்டிய பாலித்து இம்மை மறுமைப் பயன்களை யீந்துவருவது வெள்ளிடைமலைபோல் தெற்றென விளங்கத்தக்கது.

இத்தகைய திருவார்ந்த திருநகரில் மகாலிங்க நாடார் மாண்பார் தவத்தின் மகவாயுதித்த சிவசுப்பிரமணிய நாடாரவர்கள் சதி சமேதராய் இல்லறத்துறை வழுவாது நடாத்திவரு நாளில் மறுமைப் பயன் கருதி மக்கட்பேற்றை விரும்பி,

> "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
> றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
> புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
> மக்களையிங் கில்லாத வர்".

என்ற நீதிப்பனுவலோர்ந்து மகிடசங்காரியாகிய மாதங்கியின் திருவடித்தாமரைகளில் மனதைச்செலுத்தி, அம்பிகைக்குகந்த அரும்பணியியற்றி அரிய விரதங்களனுட்டித்து வந்தார். அம்பிகையும் அருள் கூர்ந்து தனது தெய்வீக சிற்சொரூப கலைகளிலொன்றை இன்னவர் பன்னியின்வயின் பாலித்தருளினள். பன்னியுமகிழ்ந்து பத்துத் திங்கட் பருவமுதிர்ந்து பண்ணவர் மதிக்கும் பெண்மகவொன்றை குரோதிஸு ஆடிமீ 24உ பரிவுடனளிக்க, அம்மகவும் வளர்பிறைச்

சந்திரனைப்போல் வளமுற வளர்ந்து இளமையிற் கல்வி பயின்று அக் கல்விக்கேற்ப ஒழுக்கத்திலும் ஞானத்திலும் உயர்ந்து மங்கைப் பருவ மடைந்தனள்.

இம் மாதர்க்கரசியின் தாய்தந்தையர்கள், மங்கை மணப்பருவ மடைந்ததை மனத்தோர்ந்து சத்துவ குணக்குன்றான பூ. பெரிய காத்தநாடாரவர்கள் சன்மார்க்க தவத்திலுதித்தசந்ததியாகிய சிதம்பர வேலுக்குக் காலயுக்திஸு ஐப்பசிமீ 7உயில் நல்ல சுப முகூர்த்தத்தில் வதுவை செய்து கொடுத்தனர்.

பின்னர் இவ்வம்மையும் தம்பதி மனமுவப்ப இல்லறத்தை வழுவின்றி நடாத்தி வந்ததோடு அம்பிகை பக்தியும் அளவின்றி யோங்க எல்லா விரதங்களினும் பிரதமமான நவராத்திரி விரதத்தை அனுட்டித்து உற்சவம் நடத்தி மெய்ஞ்ஞானமோங்கி, இவ்வுலக வாழ்வில் வெறுப்பும், அவ்வுலக வாழ்வில் விருப்புமுற்று, உற்றாரையும் பெற்றாரையு மழைத்து, நவராத்திரி விரதச்சிறப்பை நன்குணர்த்தி, நவராத்திரிக்கேற்ற நவநாள் உற்சவத்தையும் தனது சொந்த நிதியினின்றும் நடத்தி வரும்படி கூறிப் பின்பு ரௌத்திரிஸு ஆடிமீ 24உ ஆகிய ஞாயிற்றுக்கிழமையன்று அம்பிகையின் திருவடி யடைந்தனள்.

இத்தகைய சிறப்பமைந்த இவ்வம்மையின் சரிதையை சிவசுப்பிரமணிய நாடாரவர்கள் விருப்பத்துக்கேற்ப வதுவைநகர் ஆறுமுக நாடாரவர்கள், செந்தமிழில் கும்மியாப்பால் கூறினர்.

இந்நூல் இடையிடையே பல சந்தவேறுபாடுகளும், சொற்சுவை பொருட்சுவைகளும், ஓசையுடைமையும், கற்பனாலங்காரம் எதுகைத்தொடை மோனைத்தொடை முதலியவைகளும் அமைந்துள்ளது. மற்றும் சந்தர்ப்பத்துக் கேற்ப சிங்கார, வீர, சோகரசம் முதலிய சார்புகளும், நாடு நகரச் சிறப்பும், கொடைச்சிறப்பும், பக்தியின் பரவசமும் பதிந்துள்ளன.

இந்நூல் கற்போர்க்கெளிதாயும், கேட்போர்க்கினிதாயும் விளங்குதலின் ஒவ்வொருவரும் மேற்கொண்டொழுகுவ ரென்பதற்கையமில்லை.

உலகத்தார் வேண்டும் பொருளை எளிதில் தரவல்ல மகாநவமி விரதத்தின் பெருமையை யாவரும் அறிந்து அனுட்டித்து உய்யும் வழிகாட்டிய தெய்வத்தன்மை வாய்ந்த உதிராமாலையம்மையின் சரித்திரத்தைக் கும்மியாகப் பாடச்செய்து அச்சிட்டு வெளியிட்ட கனதனவானாகிய சிவசுப்பிரமணிய நாடாரவர்களுக்கும், இக் கதாநாயகியின் மணவாளராகிய சிதம்பர நாடாரவர்களுக்கும், இதைப் பத்தி சிரத்தையுடன் பாடிக்கொடுத்த முத்தமிழ் வித்வானாகிய ஆறுமுக நாடாரவர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவியாகிய பத்திரகாளியம்மன் அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருடார்த்த நான்கையும் தந்தருள்வாளாக.

இங்ஙனம்

அப்பகரைக் கிராமம் ஞானனந்த சுவாமிகளின் மாணாக்கரில்

ஒருவரும், உத்தமர் திருவடிக் குழுவலூழியருமான

S. S. சங்கையாப்புராணிகர்.

சாற்றுக்கவிகள்.

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலை, மானேஜிங்
புரோப்ரைட்டராகிய, தேவாரபாராயணம்
அ. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள்
இயற்றியது.

ஆசிரிய விருத்தம்.

உலகமா தாவெனும்பத் திரகாளி யம்மைபதத் துதிரா மாலை
இலகுமா பத்தியினுல் நவராத்ரித் திருவிழா வியற்றி யீண்டே
அலகிலா வருள்பெறுசீர்க் காதையினைக் கும்மியா வறைந்துய்ந் தானுல்
புலவர்காண் டொறுமகிழ வாறுமுக நாவலனற் புகழ்மிக் கோனே.

திருமங்கலம் தாலூகா, அப்பகரைக் கிராமம், ஞானனந்த
சுவாமிகளின் மாணுக்கரிலொருவரான
சங்கையாப் புராணிகரவர்கள்
இயற்றியவை.

ஆசிரிய விருத்தம்.

கல்வினில் மேரு கவிகளி லனுமன்
காரிகை யரிலருந் ததியே
செல்வினிற் காளந் தெய்வத்தில் முருகன்
க்ஷேத்திரந் தனிற்சிதம் பரமே
மல்வினி லூதை மதலையா மிந்த
மகியர சினில்ரகு ராமன்
சொல்வினி லாறு முகவனின் சொல்லே
தூய்மையென் றறைகுவர் புலவோர்.

வேறு.

சீருலவு பதுமமல ராசனியி னருள்பெருகு
　　திருமங்கை நகர தனில்வாழ்
　தேவியபி ராமிஜெக பூஜிதவி லோசனி
　　திருவடிக் கடிமை யெனுமெய்ப்

பேருலவு சிவசுப்ர மணியபூ மன்தவப்
　　பெற்றியதி னுனு தித்த
　பேதையுதி ராமாலே பெட்பினொடு செய்துகதி
　　பெற்றநவ மிப்பெ ருமையைப்

பாருலவு பலகோடி பக்தர்களு மேயுளம்
　　பாவித்து மதியு யர்ந்து
　பந்தவினை நீங்கியுயர் பரமபதி யெய்திடப்
　　பரமவுப கார முற்று

வாருலவு களபதன வள்ளிமண வாளனருள்
　　மகிமையால் கும்மி யமிர்தை
　வையகத் துய்த்தனன் வதுவைநகர் வந்தகவி
　　வலவனு மாறு முகனே.

திருமங்கலம் பாண்டியகுல க்ஷத்திரியநாடார் செக்கண்டரி
ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ரா. சடகோபரெட்டியாரவர்கள் இயற்றியவை.

கட்டளைக் கலித்துறை.

ஆறு முகமன்னி யோடு மணிதிரு மங்கலத்தில்
ஆறு முகன்கண நாத ருடனம ரம்பிகைமேல்
ஆறு முகன்கூ றியகும்மி நாளு மறைபவர்கல்
ஆறு முகமுமெய்ஞ் ஞானமு மென்று மடைகுவரே.

ஆசிரிய விருத்தம்.

மதிதவழு மாடமுறுந் திருமங்கை வள்நகரில்
　　வைகுமம் பிகை பதத்தில்
　மனம்வாக்கு மெய்யினுல் வழுவின்றித் தொண்டுசெய்யு
　　மதிநுட்ப தவசீ லர்கள்

மதியர்புகழ் தனதனிகர் பொருளுமிகு மதனையுறழ்
மன்னன்சிவ சுப்ர மணியன்
மாதவத் துதித்தவுதி ராமாலை பக்தியும்
மாதவியி னருளு மோங்க
நிதிகள்மிகு பொருள்களுறு வதுவைநகர் தனில்வந்த
நின்மல னறு முகனிந்
நிலவுகவி வாணர்புகழ் மகளிர்களும் மைந்தர்களும்
நீளமு தெனப்ப ருகவே
கதியணுவுங் குறைவின்றித் தமிழ்மொழியின் வளந்துன்றக்
கழறினன் கும்மி யாப்பால்
கனசங்க மமர்முருக னுயர்பதமா மலர்களுங்
காளிபத முங்காக்க வே.

சென்னை தமிழ் நாடக உபாத்தியாயராகிய மகா-௱-௱-ஸ்ரீ
ச. சு. சங்கரலிங்க நாடாரவர்களின் பிரதம
மாணவராகிய வதுவார்பட்டி
K. S. சின்னச்சாமி பாண்டியரவர்கள் இயற்றியது.
ஆசிரிய விருத்தம்.

அனமுலவு வனசமது தினமொழுகு புனல்பெருகி
யழகொளிர விளைபழ னமார்
அங்கமென மல்குதிரு மங்கலம் விளங்கவள
ரனைகௌரி தனைநினைந்து
மனதினிய தனிவிரதம் நனிபுரியும் வனிதையுதி
ராமாலை வாலைரதி யாள்
மகிமைபெறு தகைமையினை யிலகுகும்மி செகமகிழ
வழுத்தென மிகுத்த புகழான்
கனகநிதி தனதனிவ னெனவெவரும் வினவுமெழிற்
காமனுயர் தாம பூமன்
கற்பகம் நிகர்த்தசிவ சுப்ரமணி யப்பிரபு
கழறென் றிடத்தமிழி னால்

பனகனமு தெனமகிழ வினியகவி யினர்புகழப்
பரையின்மிகு கிருபை பெருகும்
பண்ணாரு பாமீறு புயலாறு முகசீலன்
பாடியிசை சூடி னனே.

திருமங்கலம் மகா-ா-ா-ஸ்ரீ சி. வ பச்சைய நாடாரவர்கள் குமாரர்

சிவசுந்தர நாடாரவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

ஆன்றோ ருடனமரு மாறுமுக நாவலவன்
சான்றோரைக் காக்குந் தயாபரியின்—னோன்றாளிற்
சாற்றினன் கும்மித் தமிழ்ச்சீர்ந்து மாலையதாய்
ஏற்றின னன்பா யிசைந்து.

திருமங்கலம் ஸ்ரீ சிதம்பரவிலாஸ் மணிமந்திர சோதிட வைத்திய
சிவானந்த ஔஷதசாலைத் தலைவரும், இதிகாச வேத
வேதாந்தாத்வைத க்ஞான நிஷ்டானுபவருமான

கா. வீரபத்திர சிவானந்த யோகியவர்கள்
இயற்றியவை.

ஆசிரிய விருத்தம்.

சீர்திகழ் புவியிற் றிருமங்கை நகரிற்
றிருவருள் துலங்குநற் றொண்டர்க்
கேர்திகழ் வரந்தந் தாளுமா காளிக்
கிசைதரு முற்சவ மனைத்திற்
பேர்திகழ் நவராத் திரிக்கொலு விரதப்
பெற்றியுந் திருவிழா வினுக்குப்
பார்திகழ் புகழ்சேர் சிதம்பர புனிதன்
பதுமினிப் பெண்ணினை யனையாள். (1)

கனமிகுஞ் சுமுகன் சிவசுப்ர மணிய
காவலன் செய்தவத் துதித்த
வனமென நடையாள் மதிமுக முதிரா
வதினுயர் மாலையா மணங்கு

*

மனமிகு நிலையாய்ச் செயும்புனி தத்தை
மதிரவி யுள்ளநா ளிலங்கத்
தனமிகப் புரிந்த நன்றியை யெவருந்
தாழ்ந்திடா துரைத்திடு வதற்கே. (2)

பூவினி லுயர்ந்த வாயுரு வேதம்
புகழ்வைத்தி யத்தின்பாங் குணர்ந்துந்
தேவியின் பக்தி யதிகமும் பெற்ற
திரனுறு மாமுகக் கவிஞன்
நாவினிற் றமிழாற் கும்மிச்சிந் தாக
நவின்றனன் கற்றவர் மற்றோர்க்
காவியே யனைய வமுதென வுணுதற்
காஞ்சுவை யதனினு மினிதே. (3)

திருமங்கலம் கூபசாஸ்திர நிபுணரும் பரம்பரைச் சோதிடருமான
மகா-ா-ா-ஸ்ரீ பழனிக்குமாருக் குருக்களவர்கள் குமாரரும்,
ஷை யூர் மணிமந்திர வைத்திய சோதிட வித்வ வேதாந்
தானுபவரான மகா-ா-ா-ஸ்ரீ
கா. சிவானந்தயோகிகளின் முதல்மாணவருமான
சோதிடம் மாணிக்கவாசகக்குருக்களவர்கள் இயற்றியது.

அகவற்பா.

தேன்பொழில் சூழுந் திருமங்கை நகரில்
வான்றிகழ் கீர்த்தி மகாலிங்க நாடார்
தவப்பய னாகத் தான்மகிழ்ந் தீன்ற
சிவசுப்ர மணிய சீலனற் புதல்வியுந்
தாழ்ச்சியில் லாது தகைமைவரப் துற்ற
பூச்சிநா டாரின் புகழ்மிகுத் தோங்கு
வம்மிசம் தழைக்க வந்தருள் புனிதன்
பங்கய வதனன் பாங்குயர் பூமன்
சினமிலா வேளாஞ் சிதம்பர நாமன்
மனைவியா முதிரா மாலையம் மையினு
லான்றோர் முறைப்படி யழகார்ந் திலங்கச்

சான்றோ ரமைத்த சத்தியா லயத்தில்
நவராத் திரிவிழா நடத்தி வருவதைச்
சிவகுமா ரப்பெயர் சீர்பெறக் கொண்டோன்
ஆறு முகப்பா வலவனன் பாகக்
கூறிய பனுவலிக் குவலயத் தூயர்ந்து
புலவரு முனிவரும் புத்தமு தெனவே
நலமுட னுண்ண நற்சுவை யானதே.

இந் நூலாசிரியரின் மாணுக்கராகிய

திருமங்கலம் வேலாயுத நாடாரவர்கள் இயற்றியது.

சீர்பூத்த செழுங்கமல மலர்விரியுந் திருமங்கைத் தேவி மீதிங்
கோர்பூத்த சிவசுப்ர மண்யனெழி லிசைக்கும்மி யியற்று கென்னப்
பேர்பூத்த வதுவைநக ராறுமுகன் பேருலகம் பெரிதும் போற்றி
நார்பூத்த செந்தேனே கற்கண்டோ வெனக்கவிதை நவின்றிட் டானே

சிவமயம்.

தோத்திரப் பாக்கள்.

விநாயகர் துதி.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருமங்க லையடிமேற் பத்தியர்ச் சனைபூசைத்
  திரமும் போற்றுந்
திருமங்க லையுதிரா மாலையம்மை தவப்பேற்றின்
  சீர்மை சொல்லத்
திருமன்க லைமனுடு கதிர்மதிவா னோருரகர்
  தினமும் போற்றுந்
திருமங்க லத்தமர்முக் குறுணிவிநா யகனிணைத்தாள்
  சென்னி சேர்ப்பாம்.

உமை துதி.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆறென்ற பகைநீத்தே யசைவற்று நிட்டையறி
  வானந்த முடிவின் மீது
ஈறென்று மிலளாகி யருவாகி யுருவாகி
  யிறுதிநூற் கெல்லை யாகிப்
பாரொன்று மோனவெளி யாய்நின்ற ரூபிநின்
  பதமலர் துதிக்க வருள்தா
சீரொன்று மருவிவளர் திருமங்க லத்தினமர்
  தேவிகௌ மாரி யுமையே.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சத்திநித்ய பத்ரியரி வாக னத்தி
சங்கரிசுந் தரிநாரி யகோரி வீரி
அத்தனிட முற்றநட னத்தி ருத்ரி
யம்பலத்தி முக்குணத்தி வேதாந் தத்தி
முத்திதருஞ் சிற்பதத்தி யம்ப ரத்தி
மோனிதிரு மங்கலத்தூர் முழுதுங் காக்கும்
பத்திரமா காளியெண் டோளி யென்றன்
பனுவல்தனக் கருளுகந்து பாலிப் பாயே.

முருகன் துதி.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புடவியுங் கடலும் நடுங்கிடக் குவடு
பொடிபட நடமிடு மயிலோன்
அடலொடு கொடிய விடவடி வுடைசூ
ரடியொடு கெடவிடு மயிலோன்
கடல்வடு விடுசி கடுவொடு படர்கண்
கடிதடங் திடங்குட முலையாள்
சடைபடி யுமையா டருதிரு முருகன்
சரவண பவனடி பணிவாம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வெய்யசூ ருக்ரகிர வுஞ்சந் தூள்செய்
வேற்கரத்த னடிதுதிக்கும் மேன்மை யாலுஞ்
செய்யதிரு மங்கலத்திற் சிறக்க வாழுந்
தேவிகௌ மாரியருட் டிரத்தி னாலும்
மெய்யன்சிவ சுப்ரமண்யன் கொடையில் மிக்கோன்
விளக்கமுற வியற்றுகென விளம்ப லாலும்
ஐயமின்றிப் பூதலத்தோர் மகிழப் பாவா
லம்பிகையுற் சவக்கும்மி யறைந்தேன் மாதோ.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
37	8	கடத்தே	கடந்தே
38	7	கண்டாள்	கண்டான்
,,	10	கொடுத்தாள்	கொடுத்தான்
41	24	பொருந்துமாண்	பொருந்துமாண்மனை
46	6	தச்கதாய்	தக்கதாய்

உ

ஓம் சரவணபவாய நம:

திருமங்கலம் பத்திரகாளியம்மன்

நவராத்திரி உற்சவக்

கு ம் மி.

காப்பு.

நேரிசை வெண்பா.

மாவலஞ்சேர்ந் தோங்குதிரு மங்கலம்வா ழம்பிகைமேற்
பாவலர்ந்த கும்மிதனைப் பாடுதற்குக்—காவலாம்
அங்குச பாசனத்தா னுதிமறை யோன்புகழும்
அங்குசபா சத்தா னடி.

கும்மி.

மங்கலமோங்குந்திருமங்கலநகர்
மாதங்கியுற்சவக்கும்மிசொல
திங்களணிசிவசங்கரிமுன்றரு
சித்திவிநாயகன்காப்பாமே. (1)

அம்புவிமாது நுதற்றிலதநிக
ரார்க்குந்திருமங்கலத்தினமர்
அம்பிகையுற்சவக்கும்மிதமிழ்க்கரு
ளம்புயப்பாமகள்காப்பாமே. (2)

சுந்தரிவீரிதுரந்தரிமாரியெண்
டோளிவடபத்ரமாகாளி
விந்தையுன்னுற்சவக்கும்மிக்குளத்தினில்
வீற்றிருந்தாள்குலமாதாவே. (3)

சத்திவேலேந்துந்தனிக்கரனேமோன
சற்குருஞானதயாபரனே
பத்திமிகுத்தவர்சித்தத்தமர்ந்தருள்
பாலிக்கும்வெற்றிமயில்வீரா. (4)

மஞ்சுறுசோலைவளஞ்சிறக்குந்திரு
மங்கலத்தம்பிகைமேற்பாடக்
கஞ்சமலருறைவஞ்சிபென்னுவிற்
கடாக்ஷிக்கநெஞ்சிற்குடியிருப்பாய். (5)

கற்றுயருத்தமர்தங்கள்முன்னேபத்ர
காளிமேற்கும்மியான்சொல்லுவதை
பெற்றமகவுபிதற்றுகுதலைச்சொற்
பேணலொத்தாள்வர்பெரியோரே. (6)

வித்தகிவாலைதிரிசூலிமறை
வேதாந்தநாதனுடனடித்த
சத்திகும்மிசொலவித்தையருளிய
சற்குருபொற்கஞ்சத்தாள்துணையே. (7)

பொன்னுலகாதிபன்விஞ்சையியக்கர்
புடைசூழமரர்முனிவாருந்
கன்னிமயிலயிராணிசமேதனுய்க்
கனகபீடக்கொலுமுகப்பில். (8)

மூவுலகுஞ்செலும்முக்காலமுந்தெரி
மூர்த்திநாரதமாமுனிவன்
காவிகாம்பரத்தண்டுகமண்டலக்
கையான்வரவுகண்டேமகவான். (9)

ஏதையாநாரதமாமுனியேநீரெங்
கேனுமதிசயங்கண்டதுண்டோ
ஓதுவீரென்றிடமாமுனியம்பிகை
யுற்சவக்கொண்டாட்டங்கூறினதை. (10)

பங்கயத்தாள்சிலம்பார்க்கச்சிறுமிகள்
பாலிகைகொட்டிவிளையாட
எங்கும்புகழ்வளர்ந்தோங்கிடச்செந்தமி
ழிங்கிதக்கும்மியியற்றுகென. (11)

இயற்றுவித்தோன் வரலாறு.

தென்னன்குலத்திலவதரித்தோனெழிற்
றிருமங்கலநகர்வாழ்தனவான்
மன்னர்மதிக்குந்திறலாளிகவி
வாணர்துதிக்கும்புகழாளி. (12)

கன்னற்சிலைவளைக்கையாளிமத
காமனினும்பேரழகாளி
சொன்னநவமணிமுத்தாளிபல
தொழிற்குஞ்சிறந்தமுதலாளி. (13)

ஆதுலர்க்கன்னக்கொடையாளிகுல
மாதரிக்கும்பேரறிவாளி
மாதங்கிமாரிமற்றாலயத்தும்முக்கால்
வரிசைநடத்துஞ்செயலாளி. (14)

கோதறுக்ஷத்ரியகுலதீபந்தன
குபேரனிகர்த்தபெருநிதியான்
நீதிநிறைதவறாதமகாலிங்க
நிருபனருந்தவத்தாலுதித்தோன். (15)

தவத்திற்சிறந்தவுதிராமாலையம்மை
தன்னைமகவெனப்பெற்றவள்ளல்
சிவசுப்ரமண்யக்குரிசிலிவ்வுத்தாரஞ்
செய்திடும்போதுமனம்பொருந்தி. (16)

இயற்றினேன் வரலாறு.

செய்யுழுதுவளைமுத்தீனும்வளஞ்
சேரும்வதுவார்புரிவாசன்
துய்யமயில்முருகையன்பொற்சீரடி
தொழுதுதுதிக்கும்விசுவாசன். (17)

நற்றமிழ்ப்பொக்கிஷங்கருணைக்கிருப்பிடம்
ஞானியாம்நாகலிங்கேந்த்ரகுரு
சிற்றடிபோற்றியேகற்றவர்பன்னூ
றெளிந்தமாணுக்கர்தமிலொருவன். (18)

ஓங்குநிதியருள்மீறும்பழனிவே
லுத்தமனற்றவத்தாலுதித்தோன்
காங்கேயனைத்துதிபூசைவலப்பாது
காப்பணியாறுமுகக்கவிஞன். (19)

அம்பிகைமேற்றுதிகூறுவதுதின
மஷ்டாக்ஷரத்தைப்பூசித்ததெனை
நம்பியேமாதங்கிநல்லருள்பெற்றிட
நாரணிகும்பிநான்பாடலுற்றேன். (20)

நன்னூலிலக்கியந்தேர்கவிஞோர்சொலுள்
நான்சொலுஞ்செந்தமிழ்வங்கஞ்செலும்
பன்னூற்பெருங்கடல்வெள்ளத்துக்கொப்பாகப்
பள்ளத்திலூறுநீர்தன்னையொக்கும் (21)

மல்லிகைமுல்லையிருவாட்சிபிச்சி
மணத்தினுற்கோத்தநாரேற்றிடல்போல்
வல்லிதுதிபூசைகிருபையருளென்றன்
வாக்கினுற்கோத்ததையேற்றிடுவீர். (22)

நாரதர் இந்திரனிடத்து மும்மூர்த்திகள்
இருக்குமிடத்தைக்கூறல்.

சித்தமகிழ்ந்துபுளகமெய்திவந்த
சீர்பெறும்யாழ்முனிகூறிடுவார்
பொற்றாமரைமலர்க்கற்பகத்தாரைப்
பொருந்தும்பவுசுடையிந்திரனே. (23)

காளகண்டனுமைபாதந்தெரிசிக்கக்
கைலைசென்றேன்கணநாதர்நந்தி
வேழமுகன்குகன்சத்திபானிலை
வெட்டவெளியாயிருந்ததங்கே. (24)

சுற்றியேநான்முகன்பாலேகியிந்தச்
சூட்சமறிந்திடச்சென்றேனங்கே
சத்தியலோகமசத்தியலோகமாய்த்
தானாச்சுதங்கயன்வாணியில்லை. (25)

வேயமர்தோளிபங்காளன்சென்றவிடம்
விண்டாலறியப்பால்வேலைசென்றேன்
ஆய்திருமாலணையாழ்வாராதியில்லை
யாழ்கடல்பாழ்கடலானதங்கே. (26)

மாதவத்தோர்கள்தவச்சூழல்தனின்
மறையோதைதூமமற்றேதுமில்லை
மாதிரக்காவலர்தன்னிலுனையன்றி
மற்றாருமில்லைதெய்வேந்திரனே. (27)

வந்துனைத்தேடிவரும்போதுவள
மல்கிடும்பாண்டியநன்னாட்டில்
விந்தையுறுதிருமங்கலந்தன்னிலே
வேழமுகன்றன்னையான்பார்த்தேன். (28)

பஞ்சமாபாதகம்வஞ்சகந்தீரப்
பறத்திடும்பாவகரநதியில்
மிஞ்சுமருவிமாசந்தவிருட்சங்கள்
வேரோடுசாய்த்துக்கரைபுரளும். (29)

ஆற்றுப்படித்துறைதன்னிற்குணதிசை
யாகக்கணபதிவீற்றிருக்கச்
சாற்றுப்பொடிமலர்க்கலவைகுங்குமஞ்
சந்தனம்பட்டாலலங்கரித்து. (30)

முக்கனிதேங்காயவற்கடலைபொரி
முறுக்குவடைலட்டுபூந்தியல்வா
தக்கபடையல்மலைபோற்குவித்துநீர்
தானேயருந்துவீரேதுவென்றேன். (31)

தவத்திற்சிறந்தவுதிராமாலையம்மை
தந்தபடையல்நானுண்ணுகின்றேன்
அவதனைதசெய்யுன்பசிநோயைத்தணித்திட
வங்கேசெல்லென்றுகைச்சைகைசெய்தார். (32)

ஆலயத்துள்ளேபுகுந்தேன்நானப்போ
தம்பிகையங்கேகொலுவிருந்தாள்
மாலயனீசனுந்தேவிமார்தம்மொடு
மாதவர்மற்றவரங்கிருந்தார். (33)

முத்தியுலகத்திற்பார்த்திடக்கிட்டாமும்
மூர்த்திகட்குமற்றனைவருக்கும்
சத்திகொலுமுனம்மெய்த்தவத்தாளந்தத்
தாயுதிராமாலேதோன்றுவதும். (34)

அரூபியாய்நின்றவள்பூசைபுரிவது
மாங்கவர்க்கானபடையல்களும்
தருவதுங்கண்டுண்டுபூசனையேற்றுநான்
சந்தோஷமாய்வந்தேனிந்திரனே. (35)

இந்திரன் நாரதரிடத்து உதிராமாலை யம்மையின் வரலாறு வினவல்.

வந்ததேயெந்தவம்மாமுனியேயந்த
மாதவஞ்செய்தவள்பேரேது
எந்தவூரெக்குலமெங்குபிறந்தவள்
யார்மகள்யாரைமணந்தசெல்வி. (36)

எத்தவஞ்செய்தவளெக்கதிபெற்றவ
ளெல்லாம்விவரமதாயெனக்குச்
சித்தமகிழ்ந்துரைசெய்திடுவீரெனத்
தெய்வேந்திரற்குமுனியுரைப்பார். (37)

பாண்டியநாட்டுச்சிறப்பு.

வேறு.

மஞ்செழுந்து கடல்முகந்து மாரிமுத்தம் பொழியும்—மா
வாழைபலாத் தழையும்—நெல்
வயல்செழித்துக் குலைசாய்த்து வருடமுப்பூ விளையும். (38)

மாஞ்சோலை மீதமர்ந்து வரிக்குயில்கள் பாடும்—இள
மயில்கள்நட மாடும்—மன
மகிழ்ந்தேயன்றில் பேடையொடு மருவியொன்றாய்க் கூடும் (39)

கஞ்சமலர் வாவியுறை கயலினங்கள் கூடும்—நீர்
கலங்கவிளை யாடும்—உழுங்
கடாவினங்கள் நீர்படுக்கக் கண்டுபயந் தோடும். (40)

வண்டுகிண்டி மெல்லரும்பின் மதுகுடைந்து வடிக்கும்—மிகு
வாஞ்சையொடு குடிக்கும்—நன்
மதிகுலைந்து நினைவயர்ந்து வண்ணம்பல படிக்கும். (41)

வானரங்கள் மாபலாவில் வந்துகனி பறிக்கும்—சூல்
மந்திக்குப சரிக்கும்—வரும்
வாரணத்தின் மேலெறிந்து வாய்திறந்தார்ப் பரிக்கும் (42)

தாளம்வளை தரும்செய்கன்னல் தானுமுத்தங் கொடுக்கும்-அனந்
தானதைக்கண் டெடுக்கும்—இது
தனதுமுட்டை யெனமகிழ்ந்து தழுவியடை படுக்கும். (43)

இன்னும்பல வுவமைசொல்லி யியற்கவிஞர் பாடும்—இதற்
கெங்குவமை கூடும்—என்
றிலங்குபுகழ் தங்குமந்த வெழிற்செழிய நாடு. (44)

திருமங்கலச்சிறப்பு.

வழுதிபதித் திலதமென வற்றாப்பெரு நதியே—சூழ
வளருமிரு நிதியே—பல
வளஞ்சிறந்து மிகுந்ததிரு மங்கலமா பதியே. (45)

மாதங்கி யாலயத்தில் வயங்குமணிச் சிகரம்—சுரர்
வந்துதுதி பகரும்—உமை
மாரிகொலு விருக்குந்திரு மங்கலமா நகரம். (46)

மாலயனும் மாதிரரும் வயிரவரும் செறிய—தேவர்
வந்துபுஷ்பஞ் சொரிய—அருள்
மாதங்கி யமருந்திரு மங்கலமா புரியே. (47)

உத்தமருங் கற்றவரு மோங்குமிந்த வூரு—இதி
லுறைவோர்பெரும் பேறு—மாரி
யுவந்தருளாற் பலதொழிலா லுயர்குடியாய் மீறும். (48)

ஓங்கும்நிதி க்ஷத்திரிய ருவந்துமனங் கூடிப்—பா
னுமையருளைப் பாடித்—தமக்
குறுதொழிலா லறவழியா லுயர்ந்தபொருள் தேடி. (49)

கவிஞருக்கு மனங்களிக்கக் கனகமணி தானம்—பசி
கண்டோர்க்கன்ன தானம்—இரு
கைவிரிவே தியர்க்களிப்பர் களிக்கப்பூகோ தானம். (50)

அன்னைதந்தையுடன்பிறந்தோரடுத்தோர்சுற்றங்கேழும்—வெகு
ஆனந்தமாய் வாழும்—பட்
டாடையணி பணிபெருகி யழகடைவர் நாளும். (51)

இந்தவிதப் புகழுடனே யிருந்தார்மன மகிழ்ந்தார்—ஜெக
தீஸ்பரியைப் பணிந்தார்—தம
திருக்கையுள்ளே கோவில்மாரிக் கியற்றிடவே துணிந்தார். 52)

கருவயிரக் கற்பிளந்து நற்பணியாய்த் திருத்திச் செயுங்
கற்பணியா யிருத்தி—அதிற்
கனகமணி யழுத்தியதை வரிவரியாய்ப் பொருத்தி. (53)

வச்சிரத்தாற் றூண்கடைந்து வரிவரியாய்ச் சமைத்துப்—பல
வகையாய்மேலு மமைத்து—முன்
மண்டபமுங் கோபுரமும் வகைவகையா யமைத்து. (54)

மாரிபத்ர காளியம்மை வந்துகொலு விருக்க—பல
மணிகலந்த வெறுக்கை—சிம்
மாசனம்வ குத்தார்நடு மையமதி லிருக்க. (55)

ஆதிகண பதிவீர னரனுமைசெவ் வேளும்—அங்
கமைத்தார்நவக் கோளும்—அதில்
அறுபத்து மூவர்களு மடியார்களும் வாழும் (56)

இன்னபடி முடித்ததனுக் கிசைந்தபூசை நாட்டம்—அதற்
கேற்றபொருளீட்டம்—அம்மன்
எழுந்தருளிவருடந்திங்களுற்சவக்கொண்டாட்டம். (57)

செய்துமுடித் தம்மையிரு திருவடியைப் பணிந்தார்—அவள்
செயலுண்டெனத் துணிந்தார்—அம்மை
திருவருளா லிருநிதியுந் திரமிகுத்து வாழ்ந்தார். (58)

உதிராமாலை பிறப்பு.

வேறு.

பதியாந்திரு மங்கலத்தோர் பத்தினியா டன்வயிற்றில்
உதிராமாலை பிறந்தகதை யோதுவேன்கே ளிந்திரனே. (59)

பத்ரகாளி யம்மனிரு பதந்துதித்து வாழ்ந்திருக்கும்
க்ஷத்ரியகுல திலதமெனத் தானுதித்த ராஜசிம்மம். (60)

சாதுசங்கப் பழக்கமுள்ளான் சற்குணத்தி லேசிறந்தோன்
ஓதுமுறை தவறுதோ னுற்றபன்னூற் கற்றவள்ளல். (61)

மாற்றலர்க்குச் சிம்மேறு மதனிலுயர் கட்டழகன்
ஏற்றவர்க்குக் கன்னனென வீகையுற்ற கொடையாளன். (62)

கன்னியிள முலைக்குவடு கதித்தழுத்தும் பணைத்தோளன்
உன்னுகலை பொருந்தமுதி னுதித்தெழுந்த மதிமுகத்தான். (63)

கஞ்சமலர்ப் பொற்கரத்தான் கருணைபெறுந் திருவிழியான்
வஞ்சியர்கள் மயல்மீறி மடலெழுதும் வடிவழகன். (64)

தனதனைப்போற் பொருளுடையான் தருமனைப்போற் பொறுமையுள்ளான்
சனகனைப்போல் ஞானமுள்ளான் றனஞ்செயன்போற் பிரதாபன். (65)

கவிபாடும் நாவலர்க்குக் கனகநிதி பணியளிப்போன்
புவிபுகழ்சிந் தாமணியோன் பொக்கிஷத்தி லேசிறந்தோன். (66)

அற்புதமின் னார்கள்படித் தாடல்செய்யப் பார்த்திருப்போன்
கற்பதித்த மோதிரங்கள் கன்னியர்க்குப் பரிசளிப்போன். (67)

ஆதுலர்க்கோ ராணிமுத்தா மடைந்தவர்க்குக் கற்பகக்கா
ஏதிலர்க்குக் கோளரியா யெங்கும்புகழ் பெற்றவள்ளல். (68)

உத்தமியா மனேகௌரி யோகினிதங் குலமாதா
பத்திர காளியம்மைப் பதமறவா விசுவாசன். (69)

தெள்ளுதமி ழோர்க்கருள்செய் தீரன்மகா லிங்கமன்னன்
வள்ளல்செய்த மாதவத்தால் வந்துதித்த சீவரத்நம். (70)

உமைதவங்காத் துக்ரகிர வுஞ்சவரை பொடிபடுத்தி
அமைதருவேற் கையன்முரு கையன்திருப் பேர்படைத்தோன். (71)

தவசுறுமா யோகிகட்குச் சத்கருமஞ் செய்துவைப்போன்
சிவசுப்ரமண் யக்குரிசில் சீர்சான்றோர் குலாதிபதி. (72)

ஆச்சிபத்ர காளியம்மை யருள்வலத்தா லழகுபர்ந்த
நாச்சியா ரம்மைதனை நானிலமெல் லாம்புகழ. (73)

மாலையிட்டுக் கூடிமன மகிழ்ந்திருக்கும் நாளையிலே
வேலையிட்ட விழிமடவாள் விளங்குமந்தப் பத்தினியாள். (74)

தன்வயிற்றிற் றவப்பலத்தாற் சதுர்முகவன் கட்டளையால்
மின்மருங்குற் றுவளவன்னை மிக்ககெற்ப மாகினளே. (75)

மாதங்கி யருள்வலத்தால் வாய்த்தகெற்பந் தான்றிரண்டு
மாதமொரு பத்தாகி வருங்குரோதி யாடிதன்னில். (76)

இருதசநால் தெய்தியதற் கிசைந்தசனி வாரமதில்
மருவிடுகற் கடகமற்ற வளர்கோள்நல்ல விடத்திருக்க. (77)

தென்னன்மல யத்துவசன் றிருமனையாள் தன்மகவாய்
அன்னைமீ னாட்சிவந்தே யவதரித்த பான்மையென. (78)

நண்பனை யுதரம்விட்டு நான்முகத்தோ னமைத்தபடி
பெண்மணியாய்த் தான்பிறந்தாள் பேருலகெ லாம்விளங்க. (79)

அன்னைதந்தை மகிழ்ந்திருக்க வடுத்தோர்சுற்றங் களித்திருக்கச்
சொன்னச்சிலை போற்பிரபை துலங்குமெழிற் சுந்தரிக்கு. (80)

உதிரமாலை யம்மையென்றே யுகந்துதிரு நாமமிட்டார்
சதிராக வளர்த்தாரிளஞ் சந்திரனைப் போல்வளர்ந்தாள். (81)

தாராட்டி முகமணைத்துத் தனதுமுலைப் பாலூட்டிச்
சீராட்டிப் பாராட்டிச் செல்வமுட னேவளர்த்தார். (82)

அஞ்சுவய தாமளவு மாடைபணி யலங்கரித்துக்
கொஞ்சிவளர்த் தார்களந்தக் கோதைரதி போல்வளர்ந்தாள். (83)

பள்ளியதி லேபுகுந்தாள் படித்தறிந்தா ளெக்கலையும்
வெள்ளிவிடை யோன்பாகம் வீற்றிருக்கு மம்பிகைமேல். (84)

பத்திவைத்தா ளந்திசந்தி பத்ரகாளி யாலயம்போய்ச்
சத்திகௌரி யைத்துதித்துத் தாளிணைக்கர்ச் சனைபுரிந்து. (85)

பெற்றவளே வுத்தமியே பேரொளியே மகமாயி
உத்தமியே நற்கருணை யுவந்தருளென்றே துதிப்பாள். (86)

உதிராமாலையின் இளமை பக்தி.

வேறு.

அலகைக்கொடியா ளெண்டோளி யையைமுக்கணி கங்காளி
ஆதரித்திட வேறெனக்கிலை நீதடுத்தெனை ஆள்-ஆள்-ஆள். (87)

மாதரிபத்திரி மாலினியே மதுபதிமாதவி யோகினியே
மாயைமாய்த்திட நாயினுங்கடை யேனெனக்கருள வா-வா-வா. (88)

மன்றினடமிடு மெந்தாயேதிரு மங்கலம்வாழ்வுற நின்றாயே
வஞ்சநெஞ்சிருள் நைந்துசென்றிட அஞ்சல்தந்தெனை ஆள்-ஆள்-ஆள்.

சுந்தரிவீரி துரந்தரியே சூலகபாலி நிரந்தரியே
சூதினல்வரு வாதையற்றிட நீதயவுரை சொல்-சொல்-சொல். (90)

சங்கரியம்பிகை பகவதியே சாம்பவிமுக்கணி பார்வதியே
தாயேநானெனு மாயையற்றிட நீயெனக்கருள் தா-தா-தா. (91)

நற்றவர்நாடும் பேரொளியே நான்மறைமுடிவினி லெழும்வெளியே
நாடிநல்லறி வோடுமோனம தோடிருந்திடு வேனோநான். (92)

எப்போதுன்னருள் பெறுவேனோ யானேஎன்னிலை யறிவேனோ
ஏகமாகிய யோகநிஷ்டையின் போகம்வாய்ப்பதெந் நாளோதான். (93)

பத்திரகாளி திரிசூலி பார்த்தென்றனைநீ பரிபாலி
பங்கயப்பத மிங்கெனக்கரு ளங்கயற்கணி பார்-பார்-பார். (94)

அல்லும்பகலு முனதடிமே லன்பேயருளுங் குணவடிவே
ஆதரித்தெனைப் பாதுகாத்திட ரேதவிர்ப்பவர் யார்-யார்-யார். (95)

சிந்தைமகிழ்வாய் சிவகாமி திருத்தாள்பணிவேன் மிகச்சிறுமி
தேறிலேன்சொலு வாரிலேனிது தேறுபூசையாய்ச் சேர்-சேர்-சேர். ()

உதிராமாலையின் விவாகம்.

வேறு.

இந்தவகை துதிபுரிந்தே யிறைஞ்சியபின் மனைபுகுவாள்
சந்ததமும் வரிசையெனத் தானடத்தி வருநாளில். (97)

அங்கவட்குப் பெதும்பையெனு மப்பருவந் தான்கடந்து
மங்கைப் பருவமதில் வயதுபதின் மூன்றினிலே. (98)

தன்னையறிந் தாளந்தத் தாயுதிரா மாலையம்மை
சொன்னமய மாமெனவே தூயவுரு வாய்ச்சமைந்தாள். • (99)

அம்பிகைமேல் வைத்தபத்தி யணுவணுவாய் வளர்ந்துவர
நம்புபத்தி நூலுடனே ஞானமறை நூற்பழக்கம். (100)

செய்துவரும் போதிவட்குத் திருமணத்தின் பருவமென்றே
ஐயனனை மனங்களித்தே யாவலுட னேயிருந்தார். (101)

அப்பதியி லழகுயர்ந்தே யதிகசெல்வந் தான்பெருகி
எப்புகழுங் குறையாம லெழில்மதனன் போல்வடிவாய். (102)

கல்விகுணப் பொக்கிஷமாய்க் கற்றோர்புக ழுத்தமனுப்
நல்லொழுக்கந் தயையுடனே நாரணிதாள் விசுவாசன். (103)

பெரியகாத்த பூபனட்புப் பெருந்தேவி தெய்வயானை
அரியதவத் தாள்வயிற்றி லாணிமுத்தாய் வந்துதித்தோன். (104)

தரியலர்கள் முரிந்தோடத் தாமமணி சிதம்பரவேள்
உரியவரென் றேபொருந்தி யுகந்தவட்குப் பரிசமிட்டார். (105)

தென்னன்மீ னம்பிகையைச் செல்வியெனப் பெற்றதுபோல்
கன்னியுதி ராமாலையைக் கண்மணியாய்ப் பெற்றவள்ளல். (106)

தேசமெங்கும் மணவோலை செலுத்தியுற்றார் நண்பருக்கும்
வாசவன்றன் மண்டபம்போல் மணமணிமண்ட பஞ்சமைத்து. (107)

உற்றாருங் கோத்திரரு முறவினரும் நண்பர்களும்
மற்றாருந் தான்சூழ மங்கையரை நீராட்டி. (108)

பட்டாடை கட்டிமிகப் பலமணிசேர் கச்சுமிட்டுப்
பொட்டணிந்து சீவிச்சடை போட்டுச்சந்த்ரப் பிறையணிந்து. (109)

சொன்னநவ மணியழுத்தித் துலங்குமணிப் பணிபூட்டிக்
கன்னல்ரதிக் கிணையாகக் கலன்வகையா லலங்கரித்து. (110)

பாடகங்க ளோலமிடப் பைங்கிளியைத் தானழைத்து
நாடர்புகழ் சிதம்பரவேள் நாயகர்க்கு வலப்புறமாய். (111)

மணவறையி லேயிருத்தி மங்களவாத் தியமுழங்கத்
தணல்வளத்தார் மறையோர்கள் தவமுனிவ ராசிசொல்ல. (112)

ஆண்டுகால யுத்திதிங்க ளைப்பசியே மூாங்தெய்தி
வேண்டுபுதன் வாரமதில் மின்பணியான் சிதம்பரவேள். (113)

ஆதிகண பதிதிருவு மனலோனவ கோட்குவந்து
வேதியராற் பூசைசெய்து மேளவகை தாமுழங்க. (114)

பாங்கியர்கள் குரவையிடப் பலமறையோ ராசிசொல
மாங்கல்யந் தனையெடுத்து மங்கைதனக் கணியலுற்றான். (115)

கன்னியுதி ராமாலை கழுத்தணிமங் கலமோங்கச்
சொன்னமல ரள்ளியள்ளிச் சொரிதலுற்றார் மற்றவரும். (116)

மன்னன்சிவ சுப்ரமண்ய வள்ளல்சிதம் பரவேட்குச்
சொன்னமணி யாழியிட்டுத் தூப்மையுற்ற கண்மணியை. (117)

மாலையிட்டுக் கைக்கொடுத்து வரிசைபல வுங்கொடுத்து
வேலையிட்ட விழியாட்கு மேலுயர்சீ தனங்கொடுத்து. (118)

ஊர்கோலம் நடத்திவந்தோர்க் குபசரித்தே யனமளித்துச்
சீருறவே தானனுப்பிச் சித்தமிகக் களித்திருந்தார். (119)

மாப்பிளையும் பெண்ணுமங்கே மன்மதனும் ரதியுமெனக்
காப்பணிந்த காதலஞ்சேர் கன்னியுதி ராமாலை. (120)

மடந்தைப் பருவமதில் மாலையிட்ட நாயகர்க்கு
உடந்தையுட னேநடந்தே யுற்றவளாய்த் தானிருந்து. (121)

தமயந்தி நளனுடனே தானிருந்த பாவனைபோல்
கமலைதிரு மாலுடனே கலந்திருந்த பண்பெனவே. (122)

இல்லறத்தை விதிப்படியே யினிதுடனே தானடத்தி
எல்லையற்ற கற்புடையா ளினிதுமகிழ் நாளினிலும். (123)

உமைதாளில் வைத்தவன்புக் கொத்தநோன்பு தவவிரதம்
அமைவாக வேகடத்தி யர்ச்சனையுஞ் செய்துவந்தாள். (124)

சிதம்பரவே ளதற்கிசைந்து தேவியுடன் கோவில்சென்று
நிதம்பூசை யர்ச்சனையும் நெய்வேத்யஞ் செய்துவந்தார். (125)

சத்திமகிழ்ந் திவர்களுக்குத் தக்கசெல்வ மேகொடுத்துச்
சித்தமகிழ்ந் தேயிருக்கச் செய்துவைத்தா ளிந்திரனே. (126)

உதிராமாலை ஞானமுறல்.

இந்தவித மாகவந்த வெழிலுதிரா மாலையம்மை
சுந்தரியாள் கோவில்சென்று தொழுதுதுதி பலபகர்ந்து. (127)

சத்தியைப்பூ சித்தவளுந் தான்றிரும்பி வரலானாள்
எத்தனைநா ளிருந்தாலு மிந்தவுட லநித்தியமே. (128)

தந்தையரும் நாயகருந் தக்கநிதி யளிக்கவல்லார்
இந்தவுட லெடுத்தபய னெய்திடநம் பேர்துலங்க. (129)

உதிராமாலை, கணவன் தந்தைதாயரிடத்துத் தன் கருத்தை வெளியிடல்.

இறந்தாலு மிருந்தவளென் றிருக்கவுமை யாலயத்திற்
சிறந்ததொன்று நம்பேராற் செய்துவைத்தே யுமைமகிழ. (130)

மனதையொரு வழிப்படுத்தி மாநவராத் திரிவிரதந்
தனைமுடித்தே யுற்சவமுந் தானடத்தி வைக்கவென. (131)

நன்மனதில் நினைந்தவளும் நாயகர்க்குத் தானுரைத்தாள்
உன்மனம்போற் பணிவிடைக ளுமையவட்குச் செய்யதனுல். (132)

என்னபொருள் வேண்டிடினு மீய்ந்திடுவே னென்றுரைத்தார்
தன்னுடைய நாயகனுர் தானுரைக்கக் கேட்டுவந்து. (133)

தன்றுதை யிடமணுகிச் சாற்றிடக்கேட் டவர்மகிழ்ந்தே
என்றனிரு கண்மணிநீ யியற்றிவரு முமைபூசை. (134)

உத்தமமென் றேமகிழ்ந்தேதன் ஒங்குநவ ராத்திரியில்
பத்திவைத்தர்ச் சனைபுரிந்தோர் பலனுரைப்பா யெனப்புகன்றூர். (135)

உதிராமாலை தந்தைதாய் முதலியவர்கட்கு நவராத்திரி நோன்பின் மகிமை கூறல்.

வேறு.

ஓங்குநவ ராத்திரிநோன் புற்றோர்பெரும் பேறும்
உரைத்திடுவேன் கேளுமென்றே யுதிராமாலை கூறும். (136)

தோன்றும்நைமி சாரண்யத்திற் சூதமுனி வந்தார்
சூழ்ந்துமுனி வோரெழுந்து துதித்தவரைப் பணிந்தார். (137)

பண்ணவரே யுலகிலுள்ளோர் பரையிருதாள் போற்றிப்
பணிந்துமுத்தி பெறும்விரதம் பகருமெனப் போற்ற. (138)

மகிமைதரும் நோன்பிலுமை மாதுமகிழ் விரதம்
மாதவரே கேளுமென்று சூதமுனி கூறும். (139)

முன்யுகத்தில் சுவேதியென்பாள் முத்திபெற்ற விரதம்
மூவருக் குகந்தநவ ராத்திரியே சரதம். (140)

மட்டடங்காப் பலன்கொடுக்கும் மாநவமி விரதம்
மகிடாசுரன் றனைவதைத்த மாதுமையாள் விரதம். (141)

சுகேதுவின் வரலாறு.

ஆதியிற் சுகேதுவெனு மரசன்சொந்தப் பதியே
ஆண்டிருந்தா னவன்மனைவி கற்பிலருந் ததியே. (142)

நீதிநெறி தவறுதா னிகரொருவ ரில்லான்
நீள்புவியை யாள்சுகேது நிருபன்மிக வல்லான். (143)

தன்வலியாற் படைப்பெருக்காற் சத்துருவைச் செயித்தான்
தவவிரத மகிமைதனைத் தான்மறந்து வாழ்ந்தான். (144)

மாநிலத்து மன்னர்வந்து வணங்கித்திறை கொடுக்க
மனைவிநற் சுவேதியுடன் மகிழ்ந்திருந்தான் றுடுக்காய். (145)

மாற்றலர்கள் படையெடுத்து வளைத்தேயமர் தொடுத்தார்
மத்தகசம் போலெழுந்தே வந்துசமர்க் கடுத்தான். (146)

சீற்றமுடன் பகைவரம்பு சீறிவிடப் பயந்தான்
தேரிழந்து வில்லறுந்து தேகமிக வயர்ந்தான். (147)

பதிநிதியுந் தளமுழுதும் பற்றலர்பாற் கொடுத்தான்
பாரிசுவே தியுடனே பாரவன மடுத்தான். (448)

காய்கனிவேர் கிழங்குடனே காய்ந்தசரு கருந்தி
கஷ்டத்துடன் பசைவரிட்ட கணைநோயுடன் பொருந்தி. (149)

சுவேதி, தன் கணவனடைந்த துன்பத்தை மாற்றல்.

துக்கமுற்றுன் பலபிணிகள் சூழ்ந்திவனை வெல்லும்
துயரடக்கி மனந்துணிந்து சுவேதியிவை சொல்லும். (150)

மன்னவரே யயனமக்கு வகுத்தவினை போமோ
வந்ததெல்லா மனுபவிப்போம் மகிழ்ச்சியுட னுமே. (151)

தசரதன்சேய் ரகுராமன் சானகிதன் னுடனே
தக்கவன மடைந்தகதை தாமறிகி லீரோ. (152)

சக்ரவர்த்தி நளராசன் றமயந்திமா துடனே
தரையிழந்து வனமடைந்த சரிதமறி யீரோ. (153)

பாண்டவர்கள் நாடிழந்து பாஞ்சாலிதன் னுடனே
பாரவனம் புகுந்தகதை பார்த்துந் தெளியீரோ. (154)

இவ்வனத்தில் நம்மையன்றி யெவருமுண்டோ கூறும்
எதுவரினு மனுபவிப்போ மிருதயத்தில் தேறும். (155)

என்றுமனந் தேற்றிக்கிழங் கிலைகாய்மூலம் புசித்தே
எடுத்தவனைச் சுமந்துதின மிருள்வனஞ் சஞ்சரித்தே. (156)

ஆங்கிரசமுனிவர் சுவேதியிடம் நவராத்திரி விரதப் பலனுரைத்தல்.

ஆங்கிருக்கும் போதவர்க ளாழிருள்நோய் சிந்த
ஆங்கிரச மாமுனிவ ராதவன்போல் வந்தார். (157)

கண்டுமுனி பாதமலர் கண்ணிலொற்றிப் பணிந்தார்
கஷ்டமெலா மெடுத்துரைக்கக் கண்டரிஷி உணர்ந்தார். (158)

வருந்தாதீ ருங்கள்துன்ப மாறும் வருமாட்சி
மாவிரதம் நவராத்திரி வருவதுவே சாட்சி. (159)

உமைக்குகந்த நவராத்திரி யுற்றதின்றே பாரும்
ஒங்குவிர தப்பலத்தா லுங்கள்துயர் தீரும். (160)

என்றுரைக்கச் சுவேதியெழுந் திருடிபதம் போற்றி
இவ்விரதப் பலனெனக்கே யிசைத்திடுமென் றேத்த. (161)

ஆங்கிரசமுனிவர் சுவேதியை நவராத்திரிவிரதம் அனுஷ்டிக்கச் செய்தல்.

மாதவரே யென்றிடவும் மாமுனிவர் தேர்ந்து
வஞ்சிமன்னன் றனைக்கூட்டிப் பஞ்சவடி சேர்ந்து. (162)

பார்வதியும் லக்குமியும் பாமகளுங் கூடும்
பஞ்சவடி தீர்த்தமிது பாவவினை சாடும். (163)

வஞ்சியேயுன் பதியுடனே மாபுனல்மூழ் கென்றார்
மாதவஞ்செய் திடத்தீர்த்த மாடியெதிர் நின்றார். (164)

கற்பூரஞ் சிவப்புவஸ்த்ரங் கஸ்தூரிசாந் தமைத்தார்
கமழ்மலர்செஞ் சாந்துபல கனிவகையுஞ் சமைத்தார். (165)

புனல்படிந்த சுவேதிதனைப் புங்கவனங் கிருத்திப்
பூசைபுரி யுபதேசஞ் செவிதனிலே பொருத்தி. (166)

பிரணவத்தோ டுச்சரித்துன் போறிவால் வருந்தி
பிணியகற்றிக் கொள்வாயென்றார் பேதைமனம் பொருந்தி. (167)

புரட்டாசித் திங்கள்பக்கப் பூர்வபிர தமையைப்
புண்யதின மாய்த்தொடங்கிப் பூசைசெய்தா ளுமையை. (168)

சதுர்த்திமுதற் சஷ்டிவரை தாய்லக்ஷ்மி தன்னை
சப்தமியட் டமிநவமி சாஸ்வதியா மின்னை. (169)

தசமிதனில் மூவருக்குந் தக்கபூசை முடித்தாள்
தாழ்ந்தசடை முனிவர்பதந் தாழுஞ்செயல் படித்தாள். (170)

ஆங்கிரச முனிவர்மகிழ்ந் தமலையருள் குன்றா
தாண்டுதொறு மிவ்விரதத் தருள்பெறுவை யென்றார். (171)

சுவேதி புத்திரப் பேறடைதல்.

உமையருளாற் சுவேதமன்னர்க் குற்றபிணி நீங்க
உறுதவத்தாற் கர்ப்பமுற்றா ளுலகிற்புக ழோங்க. (172)

பற்றலர்கள் பயமொழியப் பரையருளி ஞலே
பாலகனைப் பெற்றெடுத்தாள் பாலமதன் போலே. (173)

அகமகிழ்ந்து வளர்த்தாரப்போ தவனைமுனி திருத்தி
ஆதிமறை யோதியுத்தத் தருந்தொழிலும் வருத்தி. (174)

சூர்யப்ர தாபனென்று துலங்கிடப்பேர் கொடுத்தார்
சொந்தநகர்க் கேகுமென்று தூயமுனி விடுத்தார். (175)

சூர்யப்ரதாபன் பகைவர்களைவென்று மகுடந்தரித்தல்.

மாற்றலர்கள் படையெடுத்து வந்தெதிர்த்து மாண்டார்,
மகிழ்ந்துதங்கள் பதியடைந்து மகுடந்தரித் தாண்டான். (176)

விந்தைநவ ராத்திரியின் விரதத்தினுல் நாளும்
வேந்தரெல்லாந் திறையளக்க வாழ்ந்தானினங் கேளும். (177)

சோதியுமை யாள்மகிடா சுரன்றன்னைக் கெடுக்க
தோழியட்ட லக்குமியைத் தினமொருவர் விடுக்க, (178)

தானவர்கள் தோல்வியுற்ற தகைமையுமை யறிந்து
தானெழுந்து போர்க்கோலஞ் சமைந்துவாளா லரிந்து. (179)

மகிடாசுரன் றனைவதைக்க மாண்டதின மெய்யாய்
மாதுமைக்கு கந்ததினம் மகாநவமி யையா. (180)

இன்னும்பல பெண்மணிக ளிவ்விரத முற்றூர்
எவ்வளவோ பலனடைந்தா ரெண்ணமுடி வற்றூர். (181)

ஊதிராமாலை நவராத்திரி விரதம்பூணல்.

ஆன்திஞ லிவ்விரதம் யான்ஞெடுத்தே யுமைக்கும்
அழகுடைய லக்குமிக்கு மன்னைசரஸ் வதிக்கும். (182)

மாதரிவர் பாதங்களில் மனதுசெலப் பொருத்தி
மணியவிர்சிம் மாசனத்திற் கொலுமுகமா யிருத்தி. (183)

பூசைசெய்தர்ச் சனைமுடித்துப் புனிதமலர் பெய்து
பொங்கமுட னலங்கரித்தே யெழுந்தருளச் செய்து. (184)

முன்மகிடா சுரனைக்கொன்ற முழுலீலை நடத்தி
முன்னின்றே ரானந்த முத்திபெறப் படுத்தி. (185)

ஆலயத்திற் றசமியன்றே யள்ளிமலர் சொரிந்து
அதற்குகந்த பூசைமூவர்க் கழகுறவே புரிந்து. (186)

மஞ்சள்நீ ராட்டியம்மை மகிழ்ந்திருக்க மெய்யாம்
வரமருளப் பெற்றுவர மனம்நினைந்தே னையா. (187)

என்றுரைக்கக் கேட்டுமகிழ்ந் தென்னிருகண் மணியே
இமையவல்லி விரதமுனக் கேற்றதுநற் பணியே. (188)

நங்குலத்துக் கேற்றதது நடத்துமென்றார் மகிழ்ந்து
நாயகியும் விரைந்தெழுந்து நன்மனையிற் புகுந்து. (189)

மாமியிடம் வந்துமையின் மகாநவமி விரதம்
மாண்புடனே நானியற்றி மனமகிழ்வேன் சரதம். (190)

பூசைவிழா வைமுடித்துப் புகழ்பெறவே துணிந்தேன்
புனிதவிடை தாருமென்று பொன்னடியிற் பணிந்தாள். (191)

தாயேயென் குலவிளக்குன் றன்னைவிட்டு நானே
தனித்துப்பத்து நாளுமனஞ் சகித்தேயிருப் பேனோ. (192)

மாலையிட்டு மனைபுகுந்து வாழ்ந்திடும்நாள் குயிலே
மறந்துனையோர் நிமிடமேனும் பிரிந்ததுண்டோ மயிலே. (193)

அன்னையிடம் போயிருந்தா லரைச்சணத்திற் களைப்பேன்
அதிவிரைவா யோடிவந்தே யம்மாவென்றே யழைப்பேன். (194)

உரைகேட்ட வுடனெழுந்தே யோடிவரக் களிப்பேன்
உகந்துகட்டித் தழுவிமுகத் தோடுமுக மணைப்பேன். (195)

இந்தவித மிருந்தவள்நா னிங்கிருக்கேன் மீண்டு
இனியுன்னுடன் கோவில்சென்றே யேவலரைக் கொண்டு. (196)

மிக்கபணி விடைதனக்கு வேண்டுவன கொடுத்து
வீற்றிருப்பே னாலயத்தில் விரதமதை முடித்து. (197)

வந்திடுவோ மென்றெழுந்து மருகியைநீ ராட்டி
மணியிழைத்த பணியெடுத்து வகைவகையாய்ப் பூட்டி. (198)

தகுந்தநிதி யெடுத்ததற்குத் தக்கோருட னெழுந்து
தானடந்தாள் தெய்வயானை சத்திகோவிற் புகுந்து. (199)

உதிராமாலை யம்மையைப்பார்த் துமைபூசைக் குகந்தாய்
உற்றதெல்லாஞ் செய்வேன்செய்யென் றுத்தமியங் கமர்ந்தாள். (200)

உதிராமாலை பூசைசெய்தல்.

வேறு.

வையகந் தன்னிலெம் மாதர்க்குந் நம்போலே
வாய்க்குமோ மாமியென் றேமகிழ்ந்து
மதியேபக வதிதாள்மிசை
கதியோடுற வதிதீவிர
மாயுமை பூசை தொடங்கலுற்றாள். (201)

சொர்ன நவமணி முத்தாரந் தொங்கல்
துலங்கு மெழின்மண்ட பஞ்சமைத்து
சுரர்மாதவ ருரகாதிபர்
நரர்மிஞ்சிய விரகெய்திடத்
தோன்று மரியா சனமமைத்து. (202)

திக்கு விஜயஞ்செ யம்பிகை யாடன்னைச்
சிங்காரஞ் செய்து கொலுவிருத்தி
திருமாதொடு மறைமாதிவர்
இருவோரையும் நெறியாகவே
சிந்தை மகிழ்ந்தரு கேயிருத்தி. (203)

ஆனை முகன்வேள் நவக்கோள் மும்மூர்த்தி
யறுபத்து மூவ ரடியார்கள்
அனைவோர்தனித் தனியாய்மகிழ்
கனிவாகவே யினிதாகிய
ஆடை பணியா லலங்கரித்து. (204)

மற்றவர்க் கான படையல் நிவேதனம்
வகைவகை யாயங்கங் கேபடைத்து
வரையான்றரு பரையாளொடு
மரைமாமல ருரைலக்குமி
வாணிமும்மாதர் மனமகிழ. (205)

சாந்து புனுகுசவ் வாதுகஸ் தூரிசெஞ்
சாந்துபட் டாடை மலர்சாத்தி
சாந்தத்தொடு தேங்காய்பழம்
மாந்தட்கனி பாங்காகவே
சாற்றவொண் ணுதனை வேத்தியமும். (206)

வேண்டிய தெல்லா மமைத்துநற் றூயை
விருப்பு மிளங்கன்று போலாக
விநயத்தொடு நினைவுற்றெழு
மனைபொற்கழ றனைவைத்தவள்
மிக்கரும் பூசை முகத்தமர்ந்து. (207)

ஆசை மயக்க மடைத்தவித் தூல
மநித்திய மென்றசை யாதிருத்தி
அதிலேபுகு மதியாய்வெகு
கதியாய்மிகு சதியேசெயும்
ஐந்தையுஞ் சூக்குமந் தனிலடைத்து. (208)

அறுபகை நீக்கியே யீடணை முற்று
மகற்றியே நிஷ்டை தனிலொடுக்கி
அறிவேபல விரிவாகவே
திரியாமலே நெறியாகவே
ஐப்புலச் சேட்டை தனையடக்கி. (209)

அந்தக் கரணமிந் திரியங்க ளால்வரு
மஞ்ஞானம் ஞானத்தீ யாலவித்தே
அருமாமறை யுருவாகிய
பெருமூகுண முறுமாதியோ
டானந்த மாகக் கலந்திருக்க. (210)

எத்தலத் துமிந்த மாதுபோல் நற்றவ
மேவருஞ் செய்தில ரென்றுமகிழ்ந்
திறைவாமம துறைமாதவி
வரையேதரு பரைமாதுளம்
இன்பமி குந்தே யருள்சுரக்க. (211)

மூவா முதல்விக்கு மூன்றுநாட் பூசை
முடித்துத் திருமாது லக்குமிக்கும்
　　முகமேமல ரகமேமகிழ்
　　செகமீதிலு வகையாலுயர்
முத்திக்கு வித்தைக்கை யுற்றவளும். (212)

அர்ச்சனை மூன்று தினம்புரிந் தாள்பின்னே
பூரந்திதி தொட்டு நவமிவரை
　　அபனுவளர் கயனேர்விழி
　　செயநாமகள் வயமேவியே
அள்ளி மலரிரைத் தானந்தமாய். (213)

பேரார் புரட்டாசிப் பூர்வப க்ஷந்திதி
பிரதமை தொட்டு நவமிவரை
　　பேராலுயர் சீராள்மலர்த்
　　தாராருதி ராமாலையும்
பூசை விடாமற் புரிந்துவந்தாள். (214)

மன்னன் சிதம்பர வேளந்தி சந்தியம்
மாதங்கி யாலயம் வந்தமர்ந்து
　　மாதாமன தேதாகிலும்
　　போதாதது தாதாவெனும்
வார்த்தையில் லாமல் நடத்திவந்தார். (215)

மங்கைபூ சைத்திரந் தானோக்கி நம்மை
வாழ்விக்க வந்தருள் மீனோக்கி
　　வயமேவிய செயமீறவி
　　னயமாகவெண் புயமாதவி
மாதவம் வாய்த்ததென் றேமகிழ்ந்து. (216)

பத்திக் குகந்தசங் கோசை முரசொலி
பாரித்துப் பூசித்து வந்தவர்க்குப்
　　பசியாமலே நிசியும்பகல்
　　கசிவாகிய ருசியாய்ப்பல
பக்ஷணம் நித்தங் கொடுத்துவந்தார். (217)

தென்னன் சிவசுப்ர மண்யநற் பூபனும்
தினந்தவ ருதுமை யாலயம்போய்
திருமாமறை யுருவாகியே
வருசோதியி னருள்மேவியே
செய்தவத் தின்திரந் தானறிந்து. (218)

பெண்மக வாயிவள் வந்தபெ ருந்தவம்
பிறந்த விடத்தும் புகுமிடத்தும்
பேரும்புகழ் சீரும்முயர்
பாருள்ளவர் யாரும்பெறுப்
பேறுபெற் றேமென் றகங்களித்து. (219)

அன்னை மகிழ்நவ ராத்திரி நற்பூசை
யாதிவா ரத்தபி ஷேகமென்றே
அடைகாயிலை யுடன்மாகனி
வடைபாயசம் படைதூபமோ
டம்பிகைக் கர்ச்சனை தான்முடித்து. (220)

ஓமப்பொடி காராப் பூந்தி யநேகஞ்செய்
துத்தமி யாலயம் வந்தவர்க்கும்
உற்றார்கிளை மற்றோர்களும்
பெற்றேசெலச் சற்றாகிலும்
ஓயாம லள்ளிக் கொடுத்திருந்தார். (221)

மங்கையர் தங்குல மாதர்செவ் வாய்வெள்ளி
வாரத்தில் மாவிளக் கையேந்தி
வருவாரெழில் திருநேரென
வுருவானவர் கிருபாகர
மாதங்கி பூசை முடித்தகல்வார். (222)

பேரானந் தங்கொண்டு பாடிடு வார்சில
பேர்களா வேசங்கொண் டாடிடுவார்
பேரோசைகள் மாறுமலே
காரார்குழல் சோர்த்தினம்
பேயாடிக் கற்றாக்கி யோடுஞ்சிலர். (223)

பந்தநோய் தீர்த்திடென் றேபணி வார்சிலர்
பார்த்தருள் தந்திடென் றேபணிவார்
பாரும்பர்கள் யாரும்பணி
கூருந்துதி நேருந்தொனி
பார்த்தே யுரத்துத் துதிப்பார்சிலர். (224)

எத்தனை பேரொலி யிடிபோல் முழங்கினு
மேற்குமோ நிஷ்டையுற் றோரறிவில்
இதமாயுமை பதமேகதி
நிதமும்மது சதமேயென
இதயத்தி லின்புறப் பூசைசெய்தாள். (225)

பெற்றவ ருற்றோர்கள் மற்றோருங் கூடிப்
பெருமகிழ் வெய்தி யிருக்கையிலே
பேராலுயர் சீராள்மலர்த்
தாராள்மனம் மாறுமலே
பேராசை மீறத் தசமியிலே. (226)

சத்தி திருவாணி மூவர் மகிழத்
தகும்புனர் பூசை தனைமுடித்துச்
சகமாயைக ளகமெய்திடா
திகமேலுயர் சுகமேவிய
சற்குண வல்லி யெழுந்துநின்று. (227)

வேழ முகன்வேள்மும் மூர்த்தி யடியார்கோள்
வீரபத் திரன்மற் றடியவர்க்கும்
விரைவாகவே மறையார்விதி
குறையாமலே நறைமாமலர்
மிகவுமி றைத்தர்ச் சனைபுரிந்தாள். (228)

ஆற்றுப் படித்துறை தன்னி லமர்ந்துநா
ளள்ளியள் ளிமிகு நீர்பருக
அறிவாயுள்ம் பரிவாகவே
தருவாயெனக் கரிமாமுகன்
ஆனந்த மாயெழுந் தங்கமர்ந்தான். (229)

பொங்கமு டன்மகிழ்ந் தேவல ராலப்பம்
பொரியவல் தோசை வடைமுறுக்குப்
பொறையாகவே வரைபோல்வர
குறையாகுடல் நிறைவாகவே
போதுமென் றேதலை யாட்டியுண்டார். (230)

177039

தசமித் தினத்தி லனைவர்க்கும் பூசை
சரியாய் நடத்தி யுமைகொலுமுன்
தாய்பார்வையின் ஓயாமலே
வாய்பேசிடு சேய்போலவே
தான்றொழு தேத்தித் துதிபகர்வாள். (231)

ஊதிராமாலை, அம்பிகையைத் துதித்தல்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மரகத வொளியாய் மாசிலா வெளியாய்
வாளயிற் கூரிய விழியாய்
பரனிடத் தமர்ந்த பச்சிளங் கிளியாய்
பாகுதே னமுதெனு மொழியாய்
சரணம்நூல் வழியாய்த் துதித்திடத் தெளியாத்
தமியனென் றவத்தினுக் கருளப்
பிரதமைத் திதியிற் கொலுவெழுந் தமர்ந்த
பிறையணி சடையனை யுமையே. (232)

மதியணி சடையார் வாமம தமர்ந்த
மரகத வல்லியா னந்த
அதிரசத் தமுதே யற்புதத் தேனே
யண்டமெண் டிசையளித் தனையே
சதிசெயு மாயை தனையறுத் தின்பஞ்
சாதிக்குஞ் சற்குண வடிவே
துதியையிற் கொலுவீற் றிருந்தெனை யாள்வாய்
சுந்தரி யம்பிகை யுமையே. (233)

எரிமழுக் கரத்தி யேற்றுவா கனத்தி
இயமனை யுதைத்திடு பதத்தி
திரிபுரம் நீற்றி செழியன் மாதவத்தி
திக்கெட்டும் விஜயமீன் றுசத்தி
அரியயன் றேராச் சத்தி யம்பலத்தி
யருணட னத்திமுக் குணத்தி
திரிதியைக் கொலுவி லெழுந்தெனை யாள்வாய்
திருவருட் கருணையம் பிகையே. (234)

பதுமவா சனத்திற் பாற்கட னடுவிற்
பாம்பணை மீதரி யுரத்தில்
வதுவைமா குணத்தி னமர்ந்துவிண் ணவர்க்காய்
வளஞ்செறி மிதிலைச்சா னகியாய்ப்
பதுதலை யரக்க னுரங்கெட வீக்கிப்
பார்பொறை தவிர்த்தரு ளனையே
சதுர்த்தியிற் கொலுவா யெழுந்துநற் கருணை
தந்தரு ளிலக்குமித் திருவே. (235)

கஞ்சனன் றேவுங் குஞ்சர மருப்பைக்
களைந்ததன் மத்தகம் பிளந்தோன்
நெஞ்சுறை யபரஞ் சிதவடி வான
நின்மலி நித்தமுன் னடியே
தஞ்சமென் றடைந்தே னஞ்சலென் றருளத்
தகுமொளிர் ரத்தினத் தவிசிற்
பஞ்சமித் திதியிற் கொலுவெழுந் தமர்ந்த
பாக்கிய வல்லி லக்குமியே. (236)

மட்டிலா நீதி வரம்பினைக் கடந்து
வலியினல் மாதிரம் புரந்த
துட்டரைத் தாக்கிச் சிட்டரைக் காத்த
துளவணி மால்திருத் தேவி
கட்டழ குயர்ந்த விமலை சீதேவி
கமலைபாற் கடல்வரு செல்வி
சட்டியிற் கொலுவா யெழுந்தெனை யாள்வாய்
சற்குண வல்லி லக்குமியே. (237)

சரஸ்வதி துதி.

சுத்தவெண் கமலப் பொகுட்டுறை பகவன்
றாயமா லுந்தியில் வந்தோன்
பத்தினி தூயாள் பாரதி வாக்காள்
பாமுதல் மீயிசை மடந்தை
சித்தமீ துறைந்து நற்றவ மியற்றுந்
திரனளித் தின்பமுற் றுய்ய
சத்தமித் திதியிற் கொலுவெழுந் தெனையாள்
தாய்கலை மகள்சரஸ் வதியே. (238)

துட்டமா யையினைத் துறந்தவ ருளத்துஞ்
சுருதிநான் கினுமர விந்த
வட்டமா யலர்ந்த மலரினும் வாணர்
மனத்தினும் வேதனு வினிலும்
விட்டக லாது விளங்கிடுந் தூய
வெள்ளைமெய் யாளெனக் கிரங்கி
அட்டமித் திதியிற் கொலுவெழுந் தருள்வா
யனைகலை மகள்சரஸ் வதியே. (239)

பவமுறு தகற்றி யகந்தைவே ரறுத்துப்
பாசபந் தங்களைக் கெடுத்துக்
கவலைநோய் தடுத்தஞ் ஞானத்தைப் படுத்துக்
கருணைமெய்ஞ் ஞானத்தைக் கொடுத்துத்
தவமிய லறியாத் தமியள்நான் சிறியா
டனக்கின்ப சாதனம் நல்க
நவமியிற் கொலுவா யிருந்தெனக் கருள்வாய்
நான்முக னுவள ரணியே. (240)

வேறு.

பல்லவி.

எந்தா யாக வந்தாய் கொலுவி
ருந்தா ளங்கயற் கண்ணியே.

சிந்தாம ணியொளியே தேவி பராபரையே
ஜெகத்திற் பொற்பத மிகத்து தித்தவர்
மகத்து வந்தனை வகுத்துக் காட்டிட (எங்)

அயனரிகா ணுவடிவே அத்தனிட முற்றவளே
ஆர ணங்களுந் தேறி டாத்தனிக்
காரணிபரி பூரணியுமை (எங்)

ஆதி யிமயவல்லி ஆனந்த நாயகியே
அஞ்சலித்திடும் வஞ்சிநோக்குறக்
கஞ்சமென்மலர்ச் செஞ்சரணத்தி (எங்)

சுந்தரி சௌந்தரியே துரந்தரி புரந்தரியே
சோதிரூபியே வேதநாயகி
ஆதியந்தமி லாதசாம்பவி (எங்)

புங்கவி யான்சிறியாள் பூசை விதியறியேன்
போற்றிமென்மலர் சாத்திநான்துதித்
தேத்துமாநவ ராத்திரிப்பலன். (எங்) (241)

கப்பற்சிந்து—மெட்டு.

காலனைக்கா லாலுதைத்த—அம்மை
ஆலவிழி மாதரசே.
கம்பீர வீரிமா கௌரியோங் காரி
காளகண் டத்திமுக் கண்ணுடைய கோரி
அம்பொன்மது ராபுரி யரசுபுரி வீரி
அட்டதிசை யுந்துவசம் நட்டிவரு சூரி
வம்புரி மருட னுயிர் வதைசெய்கௌ மாரி
வாதிட்டு மன்றினட மாடியவொய் யாரி
சம்புதிரி யம்பகன் சங்கரன் பாரி
சச்சிதா னந்தமெனுஞ் சாம்பவிதாள் கோரி (242)

போற்றியேயர்ச் சனைபுரிந்தால்—நாளும்
பொங்கியவாழ் வேதருவாள்
பொல்லாத பாவங்கள் பிணிநோய் விலக்கும்
புகழேறு சன்மார்க்கப் பூரண மளிக்கும்

கல்லாத வஞ்சமதிக் கருவைத் தவிர்க்கும்
கருணையா னந்தமா ஞானந் தழைக்கும்
சொல்லாற் சுருதியா லெட்டாமல் நிற்கும்
தூயவறி வாளர்மன நிட்டையி லிருக்கும்
எல்லாமு முன்செயல்க ளென்றே துதிக்கும்
எனையாள வென்முனே கொலுவா யிருக்கும். (243)

அம்பிகையே காத்திடென்று—வெகு
அன்புடனே அஞ்சலித்து.
ஆனந்த மாயெழுந் தடிமலர் போற்றி
அழகுபணி யாடைமுத் தாரமலர் சாத்தி
கூனன தனுவினிற் கொடும்பகழி சேர்த்தி
குலமகளிர் சூழ்ந்திடக் குதிரைமே லேற்றி
வானவர்கள் மாதவர்கள் மாலயனும் போற்ற
மயிடவ சம்மாரம் வந்ததை மதிக்க
மீனத் தனித்துவசம் மிகவே பிடிக்க
வீரர்கண நாதர்களெல் லோரு மடுக்க. (244)

வீரமொடார்ப் பரித்திடவே—அம்மை
மேவலர்போர் தரித்திடவே.
மெய்த்தவத் தாளிந்த மேன்மையுறு தேவி
மெய்யான தவவுதி ராமாலை யம்மை
உத்தாவி ஞல்முரசு மேளவகை யார்க்க
உறுத்தோங்கும் வீரர்களின் நாணொலி முழங்க
மயிடமீ தேறியெமன் வன்பாச மெடுக்க
மாலுறுத் தாழிதன் வலக்கர மெடுக்க
வைத்தகரு மருந்துகளின் வேட்டுகள் வெடிக்க
மயிலேறி வேல்முருகன் வண்கர மெடுக்க. (245)

இந்திரன் நாரதருடன் திருக்கோயிலையடைதல்.

இங்கிடிபோ லேமுழங்கும்—தொனி
எண்டிசையு மேவழங்கும்.
ஏரேசை கேட்டாயோ விந்திரனே அந்த

இமயவல்லி போருக் கெழுந்திடு முழக்கம்
பாரா திருக்கிற் பழிவரு மெனக்கும்
பாகசா தனவிதோ போகிறே னென்று
நாரத ரெழுந்திட நடுங்கிவா சவனும்
நானும்வரு வேனென்றே அயிராணி யான
பாரிசுரர் மாகச முரசுநட மாதர்
பண்ணவர்கள் கந்தருவ ருடன்பாரில் வந்தார். (246)

ஆலயத்தி னுட்புகுந்தார்—யாரும்
அன்புருவ ராய்மிகுந்தார்.
அம்பிகையின் போர்க்கோலங் கண்டுபணிந் தார்கள்
ஆலயத் தெண்ணிலா வழகையுங்கண் டார்கள்
நம்முலகி லில்லாத நன்னிதியென் றார்கள்
நங்கையுதி ராமாலே நற்றவமென் றார்கள்
செம்மையுறு மிப்பதி சிறந்ததல மிதில்வாழ்
செல்வமிகு சான்றோர்கள் சிறந்தவர்க ளென்றார்
அம்மைபரு கிற்சூழ்ந்து நிற்பவர் சிறப்பும்
அழகுடைய யாழ்முனியே யானறியக் கூறும். (247)

நாரதர் இந்திர னுக்குக் கோயிற்றிருப்பணிகளையும் சுவாமிகளின் பெயர்களையுங் கூறல்.

நொண்டிச்சிந்து.

கற்பகக் காநிழலிற்—பல
கந்தருவர் மாமுனிவர் வானவர் சூழ
பொன்னரி யாசனத்தில்—அழகார்
புலோமசை யருகுறக் கொலுவி லமரும்
வாசவ னேகேள்நீ—என்று
மாதவ நாரத ரோதிடுவார்
இப்பதி தனில்வாழ்வோர்—இருநிதி
ஏராள மாய்ப்படைத்த செழியன்குலத்தார்
பொதுப்பண்டின் பணச்செலவால்—இந்தப்
பொன்மயக் கோபுரவா லயஞ்சமைத்து

மாரிபத்ர காளியம்மன்—பணியணி
வாகனங்க ளுற்சவங்கள் நித்தப் பூசைகள்
வேண்டிய பண்டுநிதிகள்—மிகவும்
விளங்கவே செய்துவைத்தா ரின்னுங் கேட்பாய்
மாரிபத்ர காளியம்மன்—எழுந்தருளி
வயிரவர் துவாரபாலர் தீப நாயகி
ஆதிசேடன் கருப்பசாமி—பேச்சி
அம்மைபலி பீடம்வாசக் காவலர் பாராய்
சொக்கர்மீ னம்பிகைவாழ்—மதுரையில்
துலங்கவர்த் தகம்செயும் மேலப் பேட்டையார்
பொதுப்பண்டின் நிதிப்பெருக்கார்—உமையிணைப்
போற்றி வளர்த்த பாண்டியன் குலத்தார்
மாரிபத்ர காளியம்மன்—கொலுவாய்
வந்தமர்சிம் மாசனம்பொன் னூசல் நாட்டிய
வசந்தமண் டபமிதுவே—சூழ
மாசற்ற நீர்பெருக்கித் தேவ கங்கைபோல்
பொற்றாமரைத் தழைபும்—நிறைந்த
புஷ்பங்களின் மீதனங்கள் புரண்டு துயிலும்
பலவகை நீர்ப்பறவை—வாழுமிதைப்
பார்ப்பதற்குன் னுயிரங்கண் பற்றுமோ பாராய்
இன்னுமுமைக் கவர்கள்செய்யும்—பணிவிடை
என்னுலுரைக் கரிது மற்றதைப் பாராய்
அஷ்டலக் குமிமாதர்—சூழ
ஆனைமுகன் முக்குருணி விநாயகன் பாராய்
வாலசுப்ர மண்யர்தெய்வ—யானை
வள்ளியம்மை யோடுல்லாச வாழ்க்கையைப் பாராய்
சுப்ரமண்யர் பள்ளியறைபார்—இவர்
சூரசங் காரஞ்செயு முற்சவ மூர்த்தி
விண்டுதிரு மகளுடனே—பூமகள்
வீற்றிருக்கும் நேர்த்திதனைப் பார்த்தறிகுவாய்
தக்ஷிணு மூர்த்தியிவர்—பழனித்
தண்டாயுத பாணியிவர் கண்டறிகுவாய்

காசிவிஸ்வ நாதர்விசா—லாட்சி
கருணை மிகுந்த நந்தி கேசுரரிவர்
தில்லைநட ராசரிவர்— இடபுறம்
சிவகாமி யம்மையிவர் வீர பத்திரர்
சம்பந்த ரப்பர்சுவாமிகள்—நற்சுந்
தரர்மாணிக்க வாசக ரேனுதி நாதர்
பொற்கம்பத் தழகினைப்பார்—அம்மைபதம்
போற்றித் துதிக்கும்நவக் கிரகநிலைபார்
சண்டே சுரரிவர்காண்—யாவருங்கை
தட்டி வணங்கநிற்குந் தாட்டிகம்பாராய்
உன்போற் பெருமையுள்ளார்—கூடியா
லோசனை செயுங்கமிட்டி யாபீசிதுவே
பொதுப்பண்டின் றருமகர்த்தா—மனம்
பூரித் திருந்துதின மாட்சிபுரியும்
முறையா பீசிதுவே—அடுத்து
முத்துமணி ரத்தினங்கள் வைத்தழுத்திய
சொர்னப் பணியணிகள்—பட்டுவகை
சோதிப் பதக்கம்வைத்துப் பூட்டுமாங்கு
மடைப்பள்ளி யுக்ராணம்—பலவகை
மாபாத கம்விலக்குந் தீர்த்தம்நிறைந்த
கூபமுந் தீர்த்தத்தொட்டி—இன்னும்பல
கோடான கோடிபெறு மாடாங்குகள்
சப்ரமஞ்ச மூஞ்சல்மண்டபம்—சுத்தவெள்ளி
தங்கத்தி னலமைத்த வாகனம்வைத்துப்
பூட்டிடு மரங்குகளும்—நவமணிப்
பொன்னரி யாசனங்கள் பிரதி பிம்பங்கள்
வைத்திடு மரங்குகளும்—பலவகை
வர்ணகு ளோப்புவைத்த மாடி யரங்கும்
இன்னமும் பலநிதியம்—இங்கே
இருக்குமதைப் பார்க்கில்நீயே யாசைகொள்ளுவாய்
ஓங்கிய பெருந்தவத்தாள்— இந்த
உதிராமாலை யம்மைசெய்த நோன்புக்கிணங்க

முன்செய்த மாதர்களும்—தவசிகள்
முனிவர்கள் முத்திபெற்ற கற்பாசிகள்
தங்கட் கறிகுறியாய்—அளகைத்
தனதனிகர் சிவசுப்ர மண்ய வேளும்
வளவனை நிகர்புகழான்—சிதம்பர
வள்ளலுமா னந்தமுட னேவியமெனும்
பதுமைகளும் செய்துவைத்த—அழகின்
பான்மைகளைப் பார்த்திடென்று நாரதர் சொல்வார். (248)

நவராத்திரிக்கொலுச்சிறப்பு.

சாவித்திரி சத்தியவான்— எமன்பதுமை
தான்செய்து வைத்திருக்கும் தாட்டிகம் பாராய்
இவள்விர தப்பலத்தால்--காட்டினில்
இறந்த கணவனுயிர் மாமன் மாமியார்
விழியும்முன் னிழந்தநகர்— எமனிடம்
மீட்டிவந்த நற்பலனைக் காட்டிநிற்கவே
சானகி சிறையிருக்க— தசமுகன்
தாவிநிற்க வனுமன்மாங் தன்னிலொளிக்க
காட்டிவைத்த பொம்மையிதுவும்—சானகியின்
கற்பின் றிறமகிமை காணுமிதிலே
சந்திர மதிபோலும்—மாண்ட
தனயன் போலுமனுசத் தோட்டியைப் போலும்
தான்செய்து வைத்தமுறைகள்—அரிச்சந்திரன்
சத்திய நெறியுந்தேவி பத்தியுங் காண
மாயவ னுந்தியிலே—மலரோன்
வந்து பிறந்ததென வைத்த பதுமை
மூவர்முனி தேவர்களும்—மற்றவரும்
மொய்த்திங்கே சூழ்ந்திருக்குஞ் சித்திரங் காண
சானகி ராமலக்ஷ்மணர்—பாதன்
சத்துருக்கன் சாம்புவ னனும னங்கதன்
சுக்ரீபன் விபீஷணனும்—நடனப்பெண்கள்
சூழக் கொலுவில்வைத்துச் சூட்சி யாகவே

செய்துவைத்த பொம்மையைப்பாராய்—அவர்களின்
செயல்களை யாவருஞ் செப்ப வெளிதோ
கைத்தாளங் கொட்டும்பதுமை— இரண்டு
கண்சுழட்டிக் கைதூக்கி யாடும்பதுமை
மத்தளங் கொட்டும்பதுமை—தலைபலைத்து
வாய்களிற் குழல்கள்வைத் தூதும் பதுமை
கொண்டவன் பக்கம்நின்று—தலையைக்
குலுக்கி விழிசுருட்டிச் சிரிக்கும் பதுமை
இன்னமுஞ் சிலபதுமை—பலபல
இங்கிதமாய்ச் செய்துவைத்தா ரானந்தங் காண
இவையெல்லாம் பார்த்துமுடிய—நமக்
கேலாது சண்டைமுரா சொலிப்பதைப்பார்
சென்றிடு வோமெனவே—உமா
தேவியின் படைப்பெருக்கில் வந்து கலந்தார். (249)

அம்பிகை, போர்க்கோலத்துடன் சென்று மகிடாசுரனைக் கொன்று மீளல்.

வேறு.

காளி ரூபமெடுத்தாள் கையிலம்பு விற்பிடித்தாள்
கண்ணிற் பொரிபறக்கவே—அகோரவீரி
கண்டகர் குலமறுக்கவே. (250)

வெற்றி முரசறைய விண்ணோர் புஷ்பஞ்சொரிய
வீரர் புடைநடக்கவே—ஆங்காரமாக
விமலை கோவில்கடக்கவே. (251)

தேட்டா லுயர்கெம்பீர நாட்டாண்மை நல்லதம்பி
நாட்டார் வகையடர்ந்துமே—செய்யேழாந்திரு
நாள்மண்ட பங்கடந்துமே. (252)

திண்டுக்கல் மேலைப்பேட்டைச் செழியன்குலத்தார் கூட்டாய்ச்
சேர்ந்த மகமைப்பண்டாலே—செய்தார்களெட்டாந்
திருநாள்மண் டபங்கண்டாளே. (253)

வடக்கு முகந்திரும்பிக் கடைத்தெரு விருபுறம்
வைத்த திருக்கண்பார்த்துமே— பல்லோர்கைகூப்பி
வணங்கித் துதிக்கவேற்றுமே (254)

தவத்துக் குரியாடந்தை சிவசுப்பிர மண்யனென்ற
தனிகன் கடையைக்கண்டாளே— தனக்குகந்த
சரிகையுத் தரியங்கொண்டாளே. (255)

அபிஷேகம் பெற்றெழுந்தே யாவணத் தெருக்கடந்தே
அங்கங்கே பூசையேற்றுமே—கண்ணன்வசிக்கு
மாலயந் தன்னைப்பார்த்துமே. (256)

கஞ்ச னுயிர்வதைத்த பஞ்சா யுதக்கரத்தான்
வெஞ்சரம்வில் நேமியேந்தியே—அதிவிரைவாய்
வஞ்சி படையுட்டோன்றியே. (257)

சென்றிட வேவிரைவிற் கந்தன்கோவிற் றெருவில்
வந்தாள் கடைக்கண்ணோக்கினள்—அதையறிந்தான்
குன்றைவேல் கொண்டுதாக்கினோன். (258)

வெற்றி மயிலிற்றோன்றி வேல்வலக் கையிலேந்தி
வீரர் புடைகள்சூழ்ந்திட— அவுணர்ச்செற்றோன்
விமலி படையுட்சேர்ந்திட. (259)

மாட்சிமை மிகுந்தோர் பூச்சிநா டார்வகையார்
காட்சியாய்ச் சொந்தப்பண்டிற்செய்— ஆறுந்திருநா
ளாட்சி யமருமண்டபம். (260)

தனில்நிவே தனம்பெற்றே யநேக திருக்கண்ணேற்று
தன்ம நெறியுருவினள்— ரதிகணவன்
மன்மதன் கோவிற்றெருவினில். (261)

சென்றாள் சங்கிலியை யன் சிலைமதன் சோணைச்சாமி
சேரப் படைக்குள்ளாக்கினள்—முதற்குமரன்
நேராய் வருதல்நோக்கினள். (262)

தந்தி முகமிலங்கத் தொந்தி வயிறுதொங்க
சப்பாணிக் கைகள்கொட்டியே—விரைந்தெழுந்தே
யொப்ப வரநகைத்துமே. (263)

வேறு

மலையப்ப பிள்ளைநாடார் வகையார்—இந்த
மாநிலம் புகழும்பெருந் தகையார்—அந்த
வர்த்தகத்தார் செய்துவைத்த பத்ரகாளின் மண்டபத்தே
வந்தா ளதைக்கடந்தாள். (264)

செங்குளத் தெருவதனைக் கண்டாள்—காளி
தேவியங்கா ளம்மையெதிர் கொண்டாள்—அங்கே
சீர்மறையோர் வீதிபுகப் பார்வதியாள் மேற்குமுகஞ்
செல்ல மறைவல்ல. (265)

பண்ணவர் மறைமுழக்கி யெழுந்தார்—திருக்
கண்ணில்நிவே தனஞ்செய்து பணிந்தார்—அந்தப்
பாவியைக்கொன் றெங்கள்துயர் தேவியேதீ ரென்றுதுதி
பகர்ந்தார் சிவன்வந்தார். (266)

தேவிவருங் கோலமதைக் கண்டார்—இன்றே
செத்தனன் மகிடனெனக் கொண்டார்—நந்தி
தீரர்வீரர் வைரவர் வீரபத்ரர் பூதகண
நாதர் திருமாதர். (267)

எமனய னுதியரை நோக்கி—சண்டைக்
கேகிடப் படைத்துணைக ளாக்கி—மிகுத்
தேவினர் கோவில்கடந்து தேவிசத்ரம் பேட்டையுங்கண்
டேக விரைவாக. (268)

சின்னச்செங்கு ளத்தெருவி லெய்தி—பெருந்
தெருவும் மகமதியர் வீதி—சென்று
திரும்பக் கிழக்குமுகத் தெருவி லநேகர்துதி
செய்தா ரருள்பெய்தாள். (269)

கங்கைக் குலத்தவர்கள் நாளும்—என்றும்
பங்க மிலாதுயர்ந்து வாழும்—தெருவில்
காதலொடு முதலிமார் பாதபூசை செய்திருக்கண்
கண்டாள் மகிழ்கொண்டாள். (270)

தீரவீரி காளியதைக் கடக்க—பிணி
தீர்த்திடப் பலமருந்து கொடுக்கும்—மகா
சித்திர மிகுந்திடுமோஸ் பத்திரி கடந்துவழி
தேடி மிகநாடி. (271)

உண்மைகண்டு தீர்ப்புரையை நாடும்—நீதி
யோங்குமர சாங்கமுன்சீப் கோடும்—மகா
உத்தமி படைப்பெருக்கோ டத்தலங் கடத்தேயுக்ர
மாக விரைவாக. (272)

தன்மைமிகு யூனியன் கிளப்பும்—மனச்
சந்தோஷப் பந்தடிமேடை வளப்பம்—இன்னும்
தக்கபல சோலையிரு பக்கமு முயர்ந்துமலர்
தாங்கும் பொலிந்தோங்கும். (273)

ஒற்றுமையே வெற்றியெனக் காட்ட—பன்னூ
லோதி யுணர்ந்தறிவை நாட்ட—இவ்வூ
ருத்தம குலத்தார்செய்த க்ஷத்திரிய வித்யாசாலை
ஓங்கு மெழிற்பாங்கும். (274)

கண்டாள் மனமகிழ்ச்சி கொண்டாள்—அதைக்
கடந்து படைநடக்க விண்டாள்—மலர்க்
காமனெனும் பூலோகங் காத்தநாடா ரருணியைக்
கடந்தாள் சமர்க்கடர்ந்தாள். (275)

சற்சனரை யேதுதிக்குந் தகையார்—தீர
முத்துக் குமாரநாடார் வகையார்—மிகு
தாட்டிகமாய்ச் செய்தவொற்றைக் கோட்டுவிநா யகர்தளி
சார்ந்தாள் மனந்தேர்ந்தாள். (276)

மகிடாசுரன் றன்னுயிரை வாட்ட—மின்னும்
மகரத் துவசமெங்கும் நாட்ட—மிக
வாய்த்தவிட மீதேயென்று கார்த்திகேய னைப்பயின்ற
மாது மற்றோர்க்கோதும். (277)

படையை வகுத்திடுகவென்றாள்—அயன்
பத்மயூக மாய்வகுத்து நின்றான்—ஆர
பாரிப்பும் ரணமுரசும் வீரர்விரைந் தார்ப்புமற்றோர்
பார்க்க பயமாக்க. (278)

நொண்டிச் சிந்து.

கண்டாள் மகிடாசுரன்—இரண்டு
கண்களிற் பொரிபறக்கக் கோபம் பெருகி
இரண்டாயிரம் வெள்ளஞ்சேனை—யுடன்வந்
தெதிர்த்துச் சமர்கொடுத்தா னங்கயற் கண்ணி
துர்க்கையின் வடிவாகி—யாளிமேற்
றோன்றியே வாளுருவிச் சோதி யுமையாள்
மயிடவன் றலையை வெட்டி—வீழ்த்திட
மாயாம லாட்டுமுக மாக வெழுந்தான்
அங்கதைப் பாய்ந்துவெட்டினாள்—சிர
மற்றிடவே மத்தகய மாமு கத்துடன்
வந்தெதிர்த்துச் சமர்தொடுத்தான்—அதனை
வாளாயுதத் தாலறுத்தாள் யாளியாய் வந்தான்
சிந்தையுள் கோபம்மிஞ்சியே—சிரமறச்
சீறி வெட்டி வீழ்த்திடப்பின் பலவுருவாய்
வரவர வெட்டித்தொலைத்தாள்—என்ன
மாயமீ தெனத்திகைத்தாள் வானச ரீரி
மகிட முகமாய்வரும்போ—துன்றன்
வலக்கைச் சூலத்தாற்குத்திச் சிரத்தை வாங்கியே
தாளில்மிதித் தோர்துளியேனும்—சோரி
தரணியில் வீழாதுசெய்தால் மாளுவா னென்று
சொல்லிட வீரிகளித்தாள்—மகிடா
சுரனு மிதையறிந்து சூழ்ந்த படையை
நோக்கினன் காளிபடையால்—ஒரு
நொடிக்குள் மடிந்துவிழ நுண்ணறி வுற்றான்
மாயைதனை யுந்தவிர்த்தான்—அந்த
மாதவிபொற் றாள்தலைமேல் வைத்திடப் பெறுந்
தவம்பெரும் முத்தியெனவே—யுணர்விற்

றன்னையறிந் தான்மகிடா சுரனுப் வந்தான்
கண்டா ளுக்கிரவீரி—வலக்
கரத்தின் சூலத்தாற்குத்திச் சிரத்தை வாங்கியே
பாதத்தி னுல்மிதித்தாள்—சோரியிப்
பாரில் விழாதபடி யாளி பருக
மாண்டுயிர் விண்ணேறி—யுமை
மாதங்கி யடிமுடிமேல் வைத்த பலத்தால்
சோதியின் வடிவாகி—பரப்பிரம
தோத்திரம் புரிந்தேயுயர் சுவர்க்க மடைந்தான்
மகிடனால் நமக்குவந்த—பொல்லா
வருத்தமெல் லாந்தவிர்த்தாள் மாதாவுமையாள்
சுகமடைந் தோமெனவே— அனைவருந்
தொழுது பணிந்தேத்தச் சோதியுமையாள்
வந்தவர்க் கருள்மிகுத்து—வேண்டும்
வரங்கள் பலகொடுத்துக் கோவில் நோக்கினுள்
விந்தைமிகு பூச்சிநாடார்—பங்களா
மிக்கசப்ரிஜிஸ்தராராபீசகன்று
தாலுகாக்கச்சேரி கஜனு—துஷ்டரைத்
தானடக்கு மாஜிஸ்ட்ரேட் டாபீ சருகே
சேர்மன் பாலசுப்ரமண்ய—பாண்டியன்
சிந்தைமகிழ்ந்து தன்பே ரென்றும் விளங்க
சோதிசெய் விளக்கின்கட்டிடம்—தனைக்கண்டு
சுத்தபர மானந்த ரூபி மகிழ்ந்து
நற்கருணை யவர்க்களித்து—மிகவும்
நல்லவர் முஜாபுரிக்காம் பங்களாவையும்
நாடார்கள் பேட்டைதன்னையும்—போர்டுஸ்கூல்
நண்பன் சிதம்பரவே ளுற்சவத்திற்கு
நாடோர் புகழக்கொடுத்த—அழகார்
நன்மணியு முனியப்ப சுவாமிவசிக்கும்
ஆலயத்தை யுங்கடந்து—நெசவுசெயும்
ஆபீசுந் தபர்லாபீசுந் தந்தியாபீசுங்
கடந்துதென் முகமாயோர்—கோட்டைக்

கரிமுகவ னலயம்போய்க் கீழ்த்திசையாய்
மாப்பிள்ளைவி நாயகனர்—கோவில்
வந்துதெற்கே திருப்பிக்கா மாட்சியம்மன்
வெறியசாமி கோவில்வழியாய்க்— கீழ்முகம்
மேவிநட ராசர்கோவில் விஸ்வகுலத்தார்
தெருவினி லனைவர்களும்—செய்திடுஞ்
சிறந்தநிவே தனம்பெற்றுத் தெற்குமுகமாய்ச்
சங்கிலி கோவில்வழியாய்க்—குணதிசை
சந்தோஷ மாய்த்திரும்பி சின்னக்கடையாம்
தெருவினி லிருபுறமும்—பத்தியாய்த்
திருக்கண்ணில் பூசைபல செய்யவேற்றுமே
சென்றிடக் கோட்டைத்தெருவிற்—காவணச்
சிறப்புஞ் செழியன்குலச் செல்வர்பத்தியும்
அருச்சனை பணிவிடையும்— கண்டுமன
தானந்தங் கொண்டுகமு வடிகடந்து
தென்முக மாகத்திரும்பிப்—படையொடு
சீரார்கடை வீதியிற் றிருக்கண் பார்த்துமே
நாடார்கள் பேட்டைகடந்து—தினந்தினம்
நம்பினோர்க் கருள்புரிந்து மேற்குமுகமாய்
வளம்பெறும் பசனைமடம்—கடந்து
மாகாளி கோவிற்றெற்குத் தெருவில் வந்தாள்
திருக்க ணிருபுறமும்—இயற்றினர்
தேவர்குலத் தோர்வணிகர் முதலிமார்களும்
அருள்வர் தமக்களித்துக்—காளிவா
மூலயந் தனைக்கடந்து வடக்குமுகமாய்
வந்துகீழ்த் திசைதிரும்பிக்—கோவில்முன்
மண்டபத் தருகில்வந்தா ளண்டர்முனிவர்
மண்டலத் தன்பர்திரண்டு—அணையடி
வாழ்த்தியே துதித்துப் போற்றி செய்துமே
வலஞ்செய்தார்ச் சனைபுரிந்து—நறுமண
மாலைசாத்தி நைவேதன தூபதீபமும்
இன்னும்பல வரிசைசெய்து— பணிபவர்

யார்க்கு மருள்கொடுத்தாள் நற்றவஞ்செயுந்
தாயுதிரா மாலையம்மை—செய்திடும்
தட்டிதீபா ராதனை தன்னையேற்றுமே
சாலவே கோவில்வலமாய்—நெருங்குந்
தக்கபடை யோடுமையா ளெக்களிப்புடன்
ஆலயம் வந்தமர்ந்தாள்—அப்போ
தம்மையுதி ராமாலை யானந்தத்துடன்
எல்லார்க்கும் பூசைபுரிந்து—பலவகை
இனிய படையல்பிர சாதங் கொடுத்துச்
செல்வங்கள் பெற்றிடவே—அம்மையைத்
தெரிசிக்க வெண்டிசைக ளிலுமிருந்து
வந்தவர்க் கனமளித்து—அம்பிகைக்கு
மஞ்சள்நீ ராட்டிவைத்து வணங்கச்செய்து
தத்தம் பதிக்கனுப்பியே—பக்தியுடன்
தன்விரதத் தைமுடித்தா ளம்மை மகிழ்ந்தாள்
உறவின்முறை யார்கள்களித்தார்—மகா
உத்தமன் சிதம்பரவேட் கந்தத்தினத்தில்
மரியாதை யாகவேதான்—நறுமண
வாசக் கலவைபூசி மாலையுமிட்டு
பரிவட்டப் பட்டணிந்து—மகிழ்ச்சியாய்ப்
பாவையுதி ராமாலை மாமியுடனே
புந்திமகிழ்ந் துடனேகி—இவர்கள்
பொருந்து மரண்போ யிருந்திடவே
வந்தவர் தமையிருத்தி—கன்னனெனும்
மன்னன் சிதம்பரவேள் வாஞ்சையுடனே
சந்தனந் தாம்பூலம்—அளித்தே
சந்தோஷ மாயவர்கள் செல்லவனுப்பிப்
பூரித்தங் கினிதிருந்தான்—அத்தருணம்
புங்கவிபைப் போற்றுமன்பே யோங்கிவளர்

பாரியுதி ராமாலே—அம்மை
பரவசா னந்தமுற்றே யில்லறத்திலே
பதியுட னினிதிருந்தாள்—இவள்
பத்திவிசு வாசமதைப் பார்த்தவுமையாள்
அதிசெல்வந் தான்றழைக்க—கிருபை
அருளப் பதியுடனு னந்தமாய்வாழ்ந்தாள்
பெற்றவர் தாங்களித்து—இவள்பெறும்
பேறே பெரும்பேறென் றோதவேவாழ்ந்தாள்
மற்றுள மாதவரும்—இவள்புரி
மாதவஞ் சிறந்ததென வாழ்த்திடவாழ்ந்தாள். (279)

உதிராமாலையின் முதுமைப் பக்தி.

கும்மி.

எப்பவு சுங்குறை யாமலே வாழ்ந்திடு
மில்லற தன்மம் வழுவாமல்
ஒப்புயர் வின்றி நடத்தி யுமைபத்தி
யோங்கியே நாட்குநாள் மீறிடவே. (280)

ஆலயஞ் சென்றே யுமைதாள் பணிந்தே
யநேகந் துதிபுரிந் தந்திசந்தி
சாலவே சென்றுய ரானந்த சந்தோஷ
சல்லாப மாகவே வாழ்நாளில். (281)

தத்துவ சாஸ்திரங் கற்றதினு லேகங்
தம்பெருஞ் செல்வஞ் சதமல்லவே
எத்தனை நாளைக் கிருந்தா லும் பின்னு
ளிந்த வுடல மநித்தியமே. (282)

ஆசை மயக்க மடைத்த வித்துலமஞ்
ஞானம் நிறைந்திடும் பேரிருளே
பாசம் புகுத்திய கங்காரஞ் சேர்த்துப்
பாதக ரூப வுருவாக்கும். (283)

தன்னை யறிந்தவர் கன்மத்தில் வாழினும்
தாமரை யினிலைத் தண்ணீர்போல்
மன்னியே வாழ்ந்தவ ரின்னிலை நீங்க
வழிபார்த் துழல்வது நிச்சயமே. (284)

இந்த வுடல்பொருள் மண்ணுகுஞ் செல்வத்தில்
இன்பமுற் ருழ்ந்தே யிருப்பதென்ருல்
விந்தை யருள்விசு வாசபே ரானந்த
மெய்ஞ்ஞான போகங் கிடையாதே. (285)

பிறப்பெனுஞ் சாகரம் நீங்கிக் கடையேறப்
பெற்றிடு நன்னுள தெந்நாளோ
பரப்பிரம ரூபப் பெருவெளிச் சோதிப்
பரவசா னந்தமென் றுவருமோ. (286)

என்றெண்ணி யேங்கி யிருக்கையி லேயிவள்
ஏகாந்த சித்தத் தியல்பாலோ
கன்றின்மேற் ருய்கொள் விருப்ப மெனபத்ர
காளி யுமையுபா யத்தாலோ. (287)

ஊதிராமாலை பரத்தை நாடல்.

ஆதி மலரோன்முன் ளுளினிற் கற்பித்
தமைத்த படியின் பலத்தாலோ
வேதனை யின்றியே போத மயக்கமேன்
மேலு முபர்ந்திடச் சாய்ந்தயர்ந்தாள். (288)

மாமிகண் டாள்திடுக் கிட்டா ளையோவென்று
வாய்விட் டழமண வாளர் வந்தார்
ஆமிது வென்ன கொடுமை யென்றேபெற்ற
ஐயரு மன்னையு மோடிவந்தார். (289)

உற்ருரு மற்ருரு மோடிவந்தா ரிந்த
வூரில்வாழ் பல்லோர் விரைந்து வந்தார்
எத்தால் வந்ததிது வென்ன விபரீத
மிங்கே நடந்ததென் றேயயர்ந்தார். (290)

அந்தச் சமயத் தருந்தவத் தாளுதி
ராமாலை கொண்ட மயக்கம் விட்டுத்
தந்தைதாய் நாயகன் மாமிமற் றோர்முகந்
தான்பார்த்துத் தீரத் துடனுரைப்பாள். (291)

என்வாழ்க்கை தன்னை விரும்பா தீரயன்
இட்ட விதியது பொய்பாமோ
சன்மார்க்க வல்லியாய் நன்மார்க்க மாயித்
தரணியில் வாழ்ந்தது போதாதோ. (292)

நீங்கள் வருந்திட வேண்டாம்நான் பூமியில்
நிமிஷ மிருக்க விதியு மில்லை
தாங்களென் மேல்வைத்த வன்பு செழிக்கவோர்
சாதன முண்டதைச் சொல்லுகிறேன். (293)

தங்கையென் பேர்கொண் டவளைக் கணவர்க்குத்
தார மாகமாலை சூட்டிடுங்கள்
அன்னவள் புத்திரப் பேறடைவாள் தீர்க்க
ஆயுள் புகழ்நிதி மேலோங்கும். (294)

நானவ ராத்திரி நோன்பை யனுட்டித்து
நடத்தி வைத்தது போலாக
ஆனந்த மாய்நீங்கள் வருஷந்தோ றும்வரும்
அழகார் புரட்டாசி மாதத்திலே. (295)

பூருவ பக்ஷப் பிரதமை தொட்டுப்
புனித நவமித் திதிவரையும்
மாரி திருக்கோவில் மண்டபத் திற்பரை
மாதங்கி தன்னைக் கொலுவில் வைத்து. (296)

நித்தியப் பூசை நடத்தியே யாவர்க்கும்
நிவேதன மர்ச்சனை கள்புரிந்து
சத்தியை யுற்சவங் கொண்டெழச் செய்துசூர்
சம்மாரந் தன்னை முடித்துவைத்து. (297)

வருடந்தோறு மென்றன் பேர்துலங்க விந்த
வைபவத் தைச்செய்து வாழ்ந்திடுங்கள்
நறுமலர்த் தாரணி நாயக ரேயென்னை
நற்றவத் தாற்பெற்ற தந்தையரே. (298)

சத்தியைப் பூசித்தி டுங்களென்ற மொழி
தன்னுளம் வாக்கிலே தங்கிடவே
நித்திரை கொண்டவள் போலே மயங்கி
நிலத்தினிற் சாய்ந்தன ளுத்தமியும். (299)

உதிராமாலை தேகவியோகமான நாள்.

ஆயிரத்துத் தொண்ணூற் றுறினில் ரௌத்திரி
ஆடி யிருபத்து நாலுதெய்தி
ஞாயிறு வாரத்தி லம்மையோ டைக்கிய
நற்கதி பெற்றாள் தவப்பலத்தால். (300)

நகரமாந்தர் உதிராமாலையின் பிரிவாற்றாமையை உணர்த்தல்.

மங்கை யுயிர்துறந் தேகிட வெல்லோரும்
வாடியே தேம்பி மனதயர்ந்தே
எங்ஙனே யெந்தப் பிறப்பி லுனைக்காண்ப
மென்றே வருந்தி மிகச்சோர்ந்து. (301)

இல்லறந் தன்னி லிருப்பது வும்பர
மேஸ்வரி நோன்பு முடிப்பதுவும்
நல்லற மென்றிந்த நாடோ ரறிந்திட
நடத்திக் காட்டிட வந்ததன்றி. (302)

பிள்ளையாய் வந்திந்தப் பூமியில் வாழப்
பிறந்ததல்ல விவள் தேவபிண்டம்
வெள்ளை விடையோன் பதமடைந் தாளினி
வேண்டாம் விசாரமென் றுள்ளடக்கி. (303)

தூலத்துக் கான சடங்கு செய்துபல
சோடினை யோடலங் காரஞ்செய்து
கோலா கலத்துட னேயெடுத்தே சென்று
கொண்டுபோ யீமக் கடன்முடித்து. (304)

மற்றச் சடங்கு மரபிற்குத் தக்கதாய்
வகைதவறாமல் நடத்தி வைத்தே
உற்ற விசார மகற்றி யவள்செய்த
வுத்தர வேதுந் தவறாமல். (305)

வருடங்க ளில்வரும் மாநவ ராத்ரியில்
மாதங்கிக் கான பணிவிடைகள்
வரிசை தவறாமல் பத்துநா ளுற்சவம்
வகைபிச காமல் நடத்தி வந்தார். (306)

உதிரா மாலையம்மை போல் நடத்திடும்
உற்சவ மென்றும் வளர்ந்தோங்க
சதிராக வேபண் டியற்றிவைத் தாரவள்
தவம்போற் சிறந்து வளர்ந்தோங்க. (307)

உலகத்தவர் சத்தியின் மகிமையைப் புகழ்தல்.

சத்தியின் விரதப் பலனிந்த வாறெனத்
தாரணி யோர்கள் புகழ்ந்து மனம்
பத்தியுற் றம்பிகை பாதம்பூ சித்தவர்
பரகதி சேர்வரென் றேமகிழ்ந்தார். (308)

ஆண்டு நிறைந்தது சிவசுப்ர மண்யனும்
அளகேச னொத்த பொருளாளன்
தாண்டவ மாடும் பரையருள் மேவிய
சற்குண வல்லி யுரைப்படியே. (309)

பின்னோன் புதல்வி யுதிராமாலையெனும்
பெண்மணி தன்னைப் பிரியமுடன்
தன்மக ளென்றே சிதம்பர வேளுக்குச்
சந்தோஷ மெய்த மணம்பொருத்தி (310)

உற்ரு ருறவோர் மனங்களிக் கவிந்த
வூரில்வாழ் பல்லோரா னந்தமெய்த
வற்ருப் பெரும்புகழோங்கிட வேசெல்வ
மணமக டன்னை யலங்கரித்து. (311)

மாதவர் வேதிய ராசிசொ லப்பல
வாத்தியங் கள்முழ சார்த்திடவே
தாதியர் சோபனம் பாடிநிற்க வெற்றித்
தாமன் சிதம்பர பூபனுக்கு. (312)

வுன்னி யரசாணி சான்ருக மண
மாலை தரித்தவர் கைக்கொடுத்து
கன்னிகைக் கான பணிபல சீதனங்
கண்டோர் வியப்புற வேகொடுத்து. (313)

ஊர்கோலஞ் செய்தே யறுசுவை யோடன
முற்ருர் மற்ருேருக் குகந்தளித்துச்
சீர்பெற்ருே மென்று வளவனிக ரிசைச்
சிவசுப்பிர மணியனு னந்தமுற்ருன். (314)

கன்னன் சிதம்பர மன்னன் திருமணக்
காதலி யோடு மனம் பொருந்திக்
கன்னற் சிலைமதன் போலுமெழி லுடைக்
காம ரதியும்போ லேமகிழ்ந்து. (315)

இப்புவி வாழ்க்கையில் நற்புகழ் மேவியே
இல்லற தன்மம் வழுவாமல்
ஒப்பிலா வம்பிகை பாதம் மறவாம
லுத்தம னென்றெவ ருந்துதிக்க. (316)

உத்தமி காளியின் நோக்கா லும்முன்
னுதிரா மாலையின் வாக்காலும்
புத்திர பாக்கியம் பெற்றே யிருசீதிப்
பூலோக தேவேந்த்ரன் போல்வாழ்ந்தான். (317)

மங்கல வாழ்த்துப்பா.

விந்தை விரதப் பெரும்பேறிஃ தாமென்று
விண்ணோர் விரைந்தெழுந் தார்வமுடன்
புந்தி மகிழ்ந்துமை பாதம் பூசித்தவர்
பூமழை சிந்தியே வாழ்த்தினரே. (318)

வேத மறைப்பொரு ளோன்வாழி யுயர்
மெய்ஞ்ஞான யோகத் தவர்வாழி
மாதங்கி மாரிபொற் றாள்வாழி யுதி
ராமாலை நோற்ற தவம்வாழி. (319)

சுந்தர மாய்க்கும்மி சொல்லென் றுரைசிவ
சுப்ரமணியன் புகழ் வாழி
புந்தி விலாசச் சிதம்பர பாண்டியன்
புத்திரர் சுற்ற முற்றார்வாழி. (320)

இன்பமுற் றிந்த நூலென்றும் விளங்கிட
எழுதித் திருத்தினோர் தாம்வாழி
அன்புடன் கேட்போர் படிப்போர் வாழியிதை
அச்சிட்டோர் நீடூழி வாழியவே. (321)

விருத்தம்.

177039

பார்வாழி மறைவாழி பண்ணோர் வாழி
யுரைவாழி திருவாழி பாமான் வாழி
சீர்பெற்ற திருமங்கை நகரம் வாழி
செழியர்குலத் தோர்வாழி தேயம் வாழி
ஏர்பொருந்து மருந்தவத்தாள் பேரா லோங்கி
யிலகிடச்செய் யுற்சவமென் ஞான்றும் வாழி
கார்வாழி பொருள்கொடுத்தச் சியற்றித் தந்த
கருணைநிறைந் தோன்வாழி வாழிமாதோ. (322)

அரங்கேற்றிய நாள்.

சகத்திரச தத்திரண்டாம் பிரப வாண்டு
தனியிடப மதியுபய தசமேழ் தெய்தி
மிகுத்தகுரு தினந்தசமி யஸ்த நாளில்
விமலிதிரு மண்டபத்தில் மேலோர் முன்னிற்
பகுத்தறிவால் நோன்பியற்றி யுதிரா மாலை
பலனடைந்த சரிதைதனைக் கும்மியாய்ப் பாடி
இகத்திலக வரங்கேற்றி யாசி பெற்றேன்
யிமயவல்லி யருள்மேவி யிசையுற் றேனே. (323)

சுபம்.